விலை ரூபா: 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM

நாதம் 01 சுக்கில ஹூ மாசி மீ 07-ம் உ திங்கட்கிழமை (19 - 02 - 1990) ஹிஜ்ரி 1410 றஜப் 22 ஓசை 01

## யாழ்ப்பாண பாதுகாப்பு
## புலிகள் - பொலிசார் பேச்சு

யாழ்ப்பாண மாவட்டத்தில் பொலிஸ் நிலையங்களைத் திறப்பது தொடர்பாக விடுதலைப் புலிகளை அணுகி யாழ்ப்பாண பொலிசார் பேச்சுவார்த்தைகள் நடத்திவருவதாகத் தெரியவருகின்றது. யாழ்ப்பாணத்தில் பொலிசார் தற்போது வரையறுக்கப்பட்டளவிலேயே தமது கடமைகளை ஆற்றிவர அனுமதிக்கப்பட்டுள்ளார்கள், பேச்சுவார்த்தை தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் இதில் எவ்வித தீர்மானங்களும் இன்னும் எடுக்கப்படவில்லை எனவும் கூறப்படுகின்றது. ஆயினும் யாழ்ப்பாணக் குடாநாட்டை விட்டு இந்திய இராணுவம் முற்றாக வெளியேறும்வரை பொலிசாரின் பணிகள் தொடர்ந்தும் மட்டுப்படுத்தப்பட்டளவிலேயே அனுமதிக்கப்படும் என விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

# வட - கிழக்கு மாகாணசபை
# மிக விரைவில் கலையும்

## ஈழத்தில் அமைதி ஏற்படுமென தமிழக முதல்வர் நம்பிக்கை

### முடிவு தெரிவிக்க ஈ. பி. ஆர். எல். எவ். அவகாசம் கேட்கிறது

( சென்னை )

இலங்கையின் வடக்கு-கிழக்கு மாகாணசபை முதலமைச்சர் வரதராஜப்பெருமாள் உட்பட அனைத்து உறுப்பினர்களும் ராஜினாமாச் செய்து புதிய தேர்தலில் போட்டியிட முன்வர வேண்டுமென்றும் விடுதலைப் புலிகள் ஜனநாயக நீரோட்டத்தில் கலந்து கொள்ள முன்வந்திருப்பதால் இது ஒன்றே ஈழத்தில் ஆயுதப் போராட்டத்துக்கு முற்றுப்புள்ளி வைத்து அமைதியை நிலைநாட்ட வழிவகுக்குமென்றும் தமிழக முதல்வர் கலைஞர் மு கருணாநிதி ஈ. பி. ஆர். எல். எவ், ஈ. என். டி. எல். எவ், ரெலோ ஆகிய குழுக்களின் பிரதிநிதிகளிடம் திட்டவட்டமாகத் தெரிவித்ததாக அறியப்படுகிறது.

திருகோணமலையில் தங்கியிருக்கும் தங்கள் தலைவர்சள் பத்மநாபாவுடனும் முதலமைச்சர் வரதராஜப் பெருமாளுடனும் கலந்தாலோசனை செய்து விட்டு இம் மாதம் 22 ஆம் தேதி இதற்குரிய பதிலைத் தெரிவிப்பதாக ஈ. பி. ஆர். எல். எவ். பிரதிநிதிகள் முதல

## இன்று பல்கலைக்கழகத்தில் தேர்தல்


யாழ். பல்கலைக் கழகத்தில் இன்று மாணவர் அவைத் தேர்தல் நடைபெற இருக்கின்றது.

வழமையை விட இம்முறை மாணவர்கள் உற்சாகமாய் தேர்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதை காணக் கூடியதாக இருக்கின்றது.

ஜெயக்குமார், இளம்பிறையன் என்பவர்கள் தலைவர் பதவிக்காக இத்தேர்தலில் போட்டியிடுகின்றார்கள். மேலும் உறுப்பினர், செயற்குழு உறுப்பினர் பதவிக்கும் இத் தேர்தலில் பலர் போட்டியிடுகின்றனர்.

இத்தேர்தலில் மூன்றுபெண் வேட்பாளர்களும் போட்டியிடுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## உள்ளே...



## வடபகுதி ரயில் சேவை அதிகரிக்கப்படும்

வடபகுதிக்கான ரயில்சேவைகள் அதிகப்படுத்த அரசு முடிவு செய்துள்ளது என்று ரயில் சேவை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

நாட்டில் உள்ள ரயில் சேவைகள் அனைத்தும் சீரமைக்கப்பட உள்ளதென்றும் தெரிவித்த அவர், உலக வங்கி இச் சீரமைப்பு வேலைகளுக்கு உதவி செய்ய முன் வந்திருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

தேவையற்ற ரயில் நிலையங்களை மூடிவிட்டு அவற்றின் ஊழியர்களை மற்றைய நிலையங்களுக்கு நியமிக்க உள்ளதாகவும் அவ்வதிகாரி தெரிவித்தார்.

இச்சீரமைப்பு வேலையால் நாட்டின் ரயில் சேவைகள் ஏனைய நாடுகளின் ரயில்சேவையுடன் போட்டி போடத்தக்கனவாய் அமையுமென்று தெரிவித்த அந்த அதிகாரி அதிக வருமானங்களைத் தரும் ரயில் பாதைகளில் மேலதிக சேவைகள் மேற்கொள்ளப்பட இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

தற்போது அதிக வருமானத்தை பெற்றுத்தரும் வடபகுதி ரயில் பாதையில் ரயில் சேவைகளை அதிகப்படுத்த போக்குவரத்து அமைச்சு முடிவு செய்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். (தி)

## சர்வகட்சி மாநாட்டு பிரதிநிதிகளின் பட்டியல்

### ஜனாதிபதி பிரேமா கேட்கிறார்

(கொழும்பு)

சென்றவாரம் ஜனாதிபதி ஆர். பிரேமதாஸா கூட்டிய சர்வகட்சி மகாநாடு தொடர்பாக, மாநாட்டில் பங்குபற்றிய கட்சிகளின் பிரதிநிதிகளைக்கொண்ட ஒரு மகாநாட்டை நடாத்துவதற்காக மகாநாட்டில் பங்குபற்றிய 26 அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளின் பிரதிநிதிகளின் பெயர்களைத் தருமாறு ஜனாதிபதி

சர்வதேச விவகாரங்களில் ஜனாதிபதியின் ஆலோசகரும் சர்வகட்சி மாநாட்டின் செயலாளருமான பிறட்மன் வீரக்கோன் சருத்துத் தெரிவிக்கையில், இதுவரை அங்கீகரிக்கப்பட்ட எட்டு அரசியல் கட்சிகள் தங்கள் பிரதிநிதிகளின் பெயர்ப்பட்டியலை சமர்ப்பித்துள்ளதாகத் தெரிவித்தார்.

அடுத்த கூட்டத்துக்கான

மாத இறுதியில் கூட்டம் நடைபெறலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

சென்ற வாரம் சர்வகட்சி மகாநாடு கூடிய சமயம் இளைஞர் அமைதியின்மைக்கான ஆணைக்குழு சமர்ப்பித்த 51 ஆலோசனைகளில் 43 ஆலோசனைகளை அரசாங்கம் ஆமோதித்துள்ளதாக ஜனாதிபதி பிரேமதாசா தெரிவித்துள்ளார். இதே வேளை 43

திட்டவட்டமாகத் தெரிவித்ததாக அறியப்படுகிறது.

திருகோணமலையில் தங்கியிருக்கும் தங்கள் தலைவர்கள் பத்மநாபாவுடனும் முதலமைச்சர் வரதராஜப் பெருமாளுடனும் கலந்தாலோசனை செய்து விட்டு இம்மாதம் 22 ஆம் தேதி இதற்குரிய பதிலைத் தெரிவிப்பதாக ஈ. பி. ஆர். எல். எவ். பிரதிநிதிகள் முதலமைச்சர் கருணாநிதியிடம் தெரிவித்து விடை பெற்றனர்.

ஈ. என். டி. எல். எவ், ரெலோ ஆகிய குழுக்களின் பிரதிநிதிகளும் இதுபற்றி ஆலோசித்துப் பின்னர் பதில் சொல்வதாகத் தெரிவித்தனர்.

## புலிகள் வந்தபின் அமைதி ஏற்பட்டது

இதே சமயம் கலைஞர் கருணாநிதி விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளை இரண்டு தடவைகள் சந்தித்து ஈழத்தில் அமைதியை நிலைநாட்டுவது பற்றிப் பேசியபோது வடக்கு கிழக்கு மாகாணத்தில் இந்திய இராணுவம் வெளியேறியதைத் தொடர்ந்து விடுதலைப் புலிகள் அந்த இடங்களில் நிலைகொண்ட பின்னர் இப்பொழுதுதான் உண்மையான அமைதி நிலவுகிறது என்பதை எவரும் நேரில் சென்று கண்டறிந்து கொள்ளலாம் என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணிப் பொதுச் செயலாளர் திரு. யோகரத்தினம் யோகி தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதியிடம் எடுத்துச் சொன்னதாகத் தெரிகிறது.

## மூன்று நாட்களாக நடந்த பேச்சுவார்த்தை

தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளை பேச்சுவார்த்தைக்கு அழைத்திருந்தார். கொழும்பில் இம்மாதம் 14ஆந் தேதி நடந்த சர்வகட்சி மாநாட்டில் பார்வையாளர்களாக விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகள் கலந்துகொள்ள வேண்டியிருந்ததால் இம்மாதம் பதினாறாம் தேதியே விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுக்கும் தமிழக முதல்வருக்கும் இடையிலான சந்திப்பு இடம்பெற்றது.

முதல்நாள் பேச்சுவார்த்தைகள் சுமார்இரண்டு மணிநேரம் இடம்பெற்றது. இப்பேச்சுவார்த்தைகளில் விடுதலைப் புலிகளின் தரப்பில் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், மக்கள் முன்னணிப் பொதுச் செயலாளர் யோகரத்தினம் யோகி, திருமதி பாலசிங்கம் ஆகியோர் கலந்துகொண்டனர். முதல்வர் கருணாநிதிக்குதவியாக மத்திய நகர்த்துறை அபிவிருத்தி அமைச்சர் முரசொலிமாறன் கலந்துகொண்டார்.

முதல்நாள் பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து ஈ.பி.ஆர் எல்.எவ், ஈ.என்.டி.எல்.எவ், ரெலோ,புளொட்ஈரோஸ்ஆகியகுழுக்களையும் பேச்சுவார்த்தைக்கு வருமாறு முதல்வர் கருணாநிதி அழைப்பு விடுத்திருந்தார்.

இந்த அழைப்பை ஏற்று இக்குழுக்களின் பிரதிநிதிகள் நேற்று முன்தினமிரவு முதல் வரைச் சந்தித்தனர். ஈ.பி.ஆர் எல்.எவ், ஈ.என.டி.எல்.எவ், ரெலோ,புளொட்இயக்கப்பிரதிநிதிகள்கூட்டாகவும்ஈரோஸ் இயக்கப் பிரதிநிதிகள் தனியாகவும் முதல்வரைச் சந்தித்துப் பேசினர்.

ஈ.பி.ஆர்.எல்.எவ் சார்பில் சோமு, சாந்தன் ஆகியோரும் ரெலோ சார்பில் கருணாகரன் ஸ்ரீகாந்தாவும், புளொட் சார்பில்கன சராஜாவிசுவும் ஈ.என் டிஎல்.எவ் சார்பில்ராஜனும், ஜெயகாந்தனும், ஈரோஸ் சார்பில் பஸீரும், பாலகுமாரும் கலந்து கொண்டனர்.

## ராஜினாமாச் செய்யும் யோசனை

ஈ.பி.ஆர்.எல்.எவ்.,ஈ.என்.டி.எல்.எவ்., ரெலோ ஆகிய குழுக்களின் பிரதிநிதிகளைச் சந்தித்த போது விடுதலைப் புலிகள் இயக்கம் ஜனநாயக வழிக்குத் திரும்பத் தீர்மானித்திருப்பதாகவும் ஈழத்தில் உண்மையான அமைதி நிலவவேண்டுமானால் விடுதலைப் புலிகளும் தேர்தலில் நின்று ஜனநாயக வழிக்கு வரவழிவகுக்க வேண்டுமென்றும் கூறினாராம். ''நீங்கள் ராஜினாமாச் செய்வது கௌரவக் குறைவாகப்படலாம். இதனால் கருணாநிதி கேட்டுக்கொண்டதற்காக ராஜினாமாச் செய்கிறோம் என்று அறிக்கை விடலாமே'' என்றும் கருணாநிதி கூறினாராம்.

ஈழத்தினுள்ள நிலைமை பற்றியும் கடந்த சில மாதங்களில் நடந்த சம்பவங்கள் பற்றியும் எடுத்துக் கூறிய முதல்வர் கருணாநிதி ஈழத்தில் நிரந்தர அமைதி நிலவ வேண்டியதன் அவசியத்தையும் இப்பிரதிநிதிகளிடம் வலியுறுத்திக் கூறினாராம். கௌரவப் பிரச்சினையை மறந்து விட்டு மக்கள் அமைதியாக வாழ்வதற்கு வழி காண வேண்டுமென்றும் மக்களின் நம்பிக்கையை இழந்து வாழ முடியாதென்றும் சொன்னாராம்.

(6ம் பக்கம் பார்க்க)

டுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## உள்ளே...

3ஆம் பக்கம்: காட்டூன் நெல்சன் மண்டேலா தமிழ்த் தேசிய இராணுவம்.
4ஆம் பக்கம்: ஜே.ஆர். பேட்டி.
5ஆம் பக்கம்: ஆசிரிய தலையங்கம், ஊர் சுற்றி மக்கள் மடல் உலக செய்திகள்.

## ஆதார வைத்தியசாலைக்கும் ஆதரவு இல்லை

(பருத்தித்துறை)

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் நிலவும் பற்றாக்குறைகள், சீர்கேடுகளால் இங்கு சிகிச்சை பெறும் நோயாளிகள் பலத்த இன்னல்களை அனுபவித்து வருவதாக இவ் வைத்தியசாலையின் அபிவிருத்திச் சபை யாழ். மாவட்ட சுகாதார சேவைகள் அத்தியட்சகருக்குப் புகார் செய்துள்ளது.

## இன்று

மண்ணின் விடிவிற்காய் மரணித்த போராளிகளை நினைவு கூரும் நினைவு அஞ்சலிக் கூட்டம் நாச்சிமார் சோவிலடியில் M.S. கனகசபாபதி தலைமையில் நடைபெற உள்ளது. அஞ்சலி உரை நிகழ்த்துவோர்:- திரு.டொமினிக் (யாழ். பொறுப்பாளர் வி. பு. ம. மு) திரு. ஆஞ்சநேயன் (வலிகாமம் பொறுப்பாளர் வி. பு. ம. மு) திரு. ராஜன் (யாழ். வி. பு. ம. மு. அ. அதிகாரி) திரு. M. கிருஷ்ணசாமி, திரு.சதாசிவம், திரு. சிவராஜா (வி. பு. மாணவர் அமைப்பு) மற்றும் மரணித்த போராளிகளின உறவினர்கள் பலரும் உரையாற்றுவார்கள்.

களைக்கொண்ட ஒரு மகாநாட்டை நடாத்துவதற்காக மகாநாட்டில் பங்குபற்றிய 26 அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளின் பிரதிநிதிகளின் பெயர்களைத் தருமாறு ஜனாதிபதி பிரேமதாஸா சம்பந்தப்பட்ட கட்சிகளைக் கேட்டுள்ளார்.

பட்ட எட்டு அரசியல் கட்சிகள் தங்கள் பிரதிநிதிகளின் பெயர்ப்பட்டியலை சமர்ப்பித்துள்ளதாகத் தெரிவித்தார்.

அடுத்த கூட்டத்துக்கான திகதி தீர்மானிக்கப்படவில்லை யென்றாலும், இந்த

## புனித பிரதேசத்துக்காக முஸ்லிம்கள் வெளியேற்றம்

(கொழும்பு)

மகாபோதி மரத்துக்குத் தெற்காக உள்ள வெஸ்ஸகிரிய என்ற முஸ்லிம் கிராமம் அனுராதபுரம் புனித பிரதேசப் பகுதிக்குள் தற்பொழுது உள்ளடக்கப்படுகின்றது. இதனால் சந்ததி சந்ததியாக வெஸ்ஸகிரியாவில் வாழ்ந்து வருகின்ற முஸ்லிம்களை அங்கிருந்து அப்புறப்படுத்துவது அதிகாரிகளுக்கு ஒரு பெரும் பிரச்சினையாக உள்ளது.

இருப்பினும் ஆரம்ப வேலைகள் நடந்துகொண்டிருக்கின்றன.

## மல்லியம் மறைவு

பிரபல திரைப்பட வசனகர்த்தாவும் நெறியாளருமான மல்லியம் ராஜகோபால் நேற்று சென்னையில் காலமானார். சவாலே சமாளி, ஜீவனாம்சம் போன்ற வெற்றிப் படங்களைத் தயாரித்து தமிழ்த் திரைப்பட உலகில் முத்திரை பதித்தவர் மல்லியம் ராஜகோபால் ஆகும்.

## தர்மபுரத்துக்கு தொலைபேசி வசதி

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி மாவட்டத்தை சேர்ந்த தர்மபுரத்துக்கு விரைவில் தொலைபேசித் தொடர்பு ஏற்படுத்தப்பட இருக்கிறது.

தர்மபுரத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளின் மக்கள் முன்னணியின் அலுவலகம் இங்கு திறக்கப்பட இருப்பதைத் தொடர்ந்து இப்பகுதிக்குத் தொலைபேசித் தொடர்பு ஏற்படுத்தப்பட இருக்கிறது.

## பருத்தித்துறை வாடிக்கையாளர்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை இலங்கை வங்கி கிளையில் வாடிக்கையாளர்களுக்கு 2000 ரூபாவுக்கு குறைந்த பணக்கொடுப்பனவுகளே இடம்பெற்று வருகின்றன. 2000 ரூபாவுக்கு மேற்பட்ட பணத் தொகையைப் பெற்றுக்கொள்ள விரும்பும் வாடிக்கையாளர்கள் பருத்தித்துறை இலங்கை வங்கியில் வழங்கப்படும் ''ரோக்கண்'' காட்டுடன் யாழ்ப்பாணத்திலுள்ள ஆஸ்பத்திரி வீதி, இலங்கை வங்கி கிளையில் பணத்தைப் பெற்றுக்கொள்ளலாமென பருத்தித்துறை இலங்கை வங்கி தெரிவித்துள்ளது.

ஆணைக்குழு சமர்ப்பித்த 51 ஆலோசனைகளில் 43 ஆலோசனைகளை அரசாங்கம் ஆமோதித்துள்ளதாக ஜனாதிபதி பிரேமதாசா தெரிவித்துள்ளார். இதே வேளை 43 ஆலோசனைகளை பாராளுமன்றத்தில் விரைவில் சமர்ப்பிப்பதற்கான ஒழுங்குகளைத் தான் மேற்கொள்வதாகவும் பிரேமதாசா தெரிவித்தார்.

எஞ்சியுள்ள 8 ஆலோசனைகளும் இளைஞர் பிரதிநிதித்துவம் பற்றியும், பாராளுமன்றம் பற்றியதாகவும் உள்ளதால் அடுத்து வரவிருக்கும் சர்வகட்சிகளின் பிரதிநிதிகள் மகாநாட்டில் இவை ஆலோசனைக்காக சமர்ப்பிக்கப்படும் என்று அவர் கருத்துத் தெரிவித்தார்.

## மீண்டும் வெளிநாட்டு நிருபர்கள்

நீண்ட காலத்தின் பின் வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள் யாழ்நகரை நோக்கிப் படையெடுத்த வண்ணமுள்ளனர். நேற்று இங்கிலாந்து, ஜேர்மனி, பிரான்ஸ், அமெரிக்காவைச் சேர்ந்த பத்திரிகையாளர்கள் யாழ். நகர் வந்தனர்.

கடந்த இரண்டு வருடங்களாக இங்கு வருவதற்கு அனுமதி மறுக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

## மக்கள் தொண்டர் படையில் எஞ்சிய 56 பேர் கோட்டையில்

யாழ்ப்பாணம் பெப்-18

வடக்கு-கிழக்கு மாகாண சபையினால் ஆரம்பிக்கப்பட்ட மக்கள் தொண்டர் படையைச்சேர்ந்த மீதமுள்ள 56 பேர் தற்பொழுது யாழ். கோட்டை பொலிஸ் நிலையத்தில் தங்கியுள்ளனர். தற்பொழுது இவர்களுக்கான சம்பளமும், ஏனைய வசதிகளையும் இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்பட்டு வருவதாக ஓர் உயர் பொலிஸ் அதிகாரி தெரிவித்தார்.

இம் மக்கள் தொண்டர் படை இந்தியாவின் ஆலோசனையின் பேரில் இலங்கை அரசாங்கத்தின் சம்மதத்துடன வடக்குக்கிழக்கு மாகாண சபையினால் அங்கீரிக்கப்பட்டது. இதற்கு இந்தியா பயிற்சியும், இலங்கை ஆயுதமும் வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

## தமிழ் நூல் பரிசுப் போட்டி

(கொழும்புத்துறை.)

உலகதமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் மலேசியாவிலுள்ள தலைமையகம் தமிழ் நூல் எழுதும் பரிசுப்போட்டியை நடாத்த இருக்கின்றது. இப்போட்டிக்கான முடிவு திகதி வைகாசி மாதம் 31ம் திகதியாகும்.

உலகத்தமிழ்ப்பண்பாட்டு இயக்க தலைமைச் செயலகத் தலைவர் பேராசிரியர் தமிழ்த் திரு. இர. ந. வீரப்பனார் அறக்கட்டளைப் பரிசுவாரியம் இப்போட்டிக்கான பரிசை வழங்குகின்றது. பரிசு பெறும் தமிழ் நூலுக்கு ஐயாயிரம் இந்திய ரூபாய்கள் வழங்கப்படும். போட்டிக்கு அனுப்பப்படும் நூல் பத்தாயிரம் சொற்களுக்குக் குறையக்கூடாது. என்றும். 25-11-90ல் சேலத்தில் பரிசளிப்பு விழா நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## முல்லைத்தீவின் அவலம்

முல்லைத்தீவின் தென்கிழக்குப் பகுதியில் அமைந்திருக்கும் கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி ஆகிய கிராமங்களை சேர்ந்த தமிழ் மக்கள் கடந்த ஐந்து ஆண்டுகளின் பின்பு தற்போது சொந்த இருப்பிடங்களைச் சென்று பார்வையிட்டு வருகின்றனர். அங்கு ஆயிரக் கணக்கான தென்னை மரங்கள் தறிக்கப்பட்டும் வீடுகள் இருந்த இடமின்றி அழிக்கப்பட்டும் பாடசாலைகள்' பொதுக் கட்டடங்கள் எதுவுமே இல்லாது தரைமட்டமாக்கப்பட்டும் இருப்பது கண்டு அவர்கள் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

காணிகளைத் துப்புரவு செய்யும் முயற்சியில் இப்பொழுது ஈடுபட்டு வருகின்றனர்.

கிணறுகள் முழுதும் பாழடைந்து பாவிக்க முடியாது உள்ளது.


# பூபாலசிங்கம் புத்தகசாலை
# புத்தகக் களஞ்சியம்

பூபாலசிங்கம் புத்தகசாலையின் ஸ்தாபனத்திற்கு கடந்த 46 ஆண்டுகளாக ஆசிரியர்கள், மாணவர்கள், பொதுசன நூலகங்கள், பல்கலைக் கழகங்கள், அரசாங்க செயலகங்கள், தேசிய சேவை செயலகங்கள், எழுந்தாளர்கள், பெற்றோர்கள், ஆராய்ச்சியாளர்கள், வர்த்தகர்கள் தந்த பேராதரவும், மறுமலர்ச்சிகாலம் தொட்டு சகல எழுத்தாளர்களும் எமது ஸ்தாபனத்தை மதித்து ஊக்குவித்ததின் பிரதிபலிப்புத்தான் இப்புத்தகக் களஞ்சியத்தின் வளர்ச்சி.

இலங்கை நாணய மதிப்பீட்டின் விலை உயர்ந்தும் பிறநாட்டு நூல்களை இறக்குமதி செய்துள்ளோம். சகல மாணவர்களினதும் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் குழந்தை இலக்கியங்களையும், உயர்ந்த எழுத்தாளர்களினதும் சிறந்த வெளியீட்டாளர்களினதும் நூல்களையும் இறக்குமதி செய்துள்ளோம். எமது களஞ்சியத்தை அலங்கரிக்கும் சில முக்கிய நூல் எழுத்தாளர்கள் ராஜம் கிருஷ்ணன், அனுராதா ரமணன், ரமணிச் சந்திரன், ராஜேஸ்குமார், பாலகுமாரன், சுஜாதா, மு. மேத்தா, வைரமுத்து, கண்ணதாசன், ஜானகிராமன், பார்த்தசாரதி, இந்துமதி, இந்திரா பார்த்தசாரதி, C. N அண்ணாத்துரை, மு, கருணாநிதி ரா. கணபதி, காஞ்சிகாமகோடி, காண்டேகர், பாரதியார், தேசிகவிநாயகம்பிள்ளை, நீலபத்மநாதன், சாவி, கல்கி, சாண்டில்யன், மு. வரதராஜன், அகிலன், லஷ்மி மற்றும் இலங்கையின் பிரபல எழுத்தாளர்கள் ஆவர்.

எமது களஞ்சியத்திற்கு ஆசிரியர்களையும், மாணவர்களையும், நூலகர்களையும் எழுத்தாளர்களையும், ஆராய்ச்சியாளர்களையும், மற்றும் வாசகர்களையும் குடும்பமாகவும் வந்து பார்வையிட்டு தெரிவு செய்யும்படி பணிவுடன் வேண்டுகிறோம்.

எமது வாடிக்கையாளர்களுக்கும், வியாபாரிகளுக்கும் விஷேட கழிவு உண்டு.

## பூபாலசிங்கம் புத்தகசாலை
## புத்தகக் களஞ்சியம்

15/2 மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

எமது தலைமையகம்: பூபாலசிங்கம் புத்தகசாலை,
பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.


# கல்வித் திணைக்களம் - யாழ்ப்பாணம்

**ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகர் (யூ. என். எச். சி. ஆர்.) கல்வி அமைச்சு நிதி ஒதுக்கீடுகளின் கீழ் முறைசாராக் கல்விப் பிரிவுகளில் மாணவர்களை அனுமதித்தல்.**

யாழ். மாவட்டத்தில் உள்ள பின்வரும் பாடசாலைகளில் இயங்கும் முறைசாராக் கல்விப் பிரிவுகளில் பாடசாலையைவிட்டு விலகியோருக்காகக் கற்பிக்கப்படும் தொழிற்திறனபிவிருத்திப் பாடநெறிகள் கீழே காட்டப்பட்டுள்ளன. இப்பயிற்சிகளைப் பெறவிரும்பும் விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களைப் பிரதிக் கல்விப் பணிப்பாளர், கல்வித் திணைக்களம், யாழ்ப்பாணம் எனும் விலாசத்திற்கு 90. 02. 28ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''முறைசாரக் கல்விப் பிரிவுகளில் சேர்வதற்கான விண்ணப்பம்'' எனக் குறிப்பிடப்படல் வேண்டும். விண்ணப்பிக்கும் ஒவ்வொரு பாடநெறிக்கும் தனித்தனியான விண்ணப்பம் அனுப்பப்படல் வேண்டும். எனினும் ஏதாவதொரு பயிற்சி மட்டும் கற்க அனுமதிக்கப்படுவார்.

விசேடமாக அசம்பாவிதங்களினால் பாதிக்கப்பட்டு இந்தியா சென்று மீண்டோரும், இடம் பெயர்ந்தோரும், ஜனசவிய திட்டத்தின் கீழ் உதவி பெறுவோரும் - ஏனையோரும் ஆண், பெண் வேறுபாடின்றி அனுமதிக்கப்படுவார்கள். பயிற்சிக் காலம் 14. 03. 1990 தொடக்கம் 30. 12. 1990 வரையாகும். பயிற்சி முடிவில் திணைக்களத்தில் நடாத்தப்படும் அறிமுறை செயல்முறைப் பரீட்சைகளில் தோற்றிச் சித்தியடைவோருக்குச் சான்றிதழ் வழங்கப்படும்.

| பயிற்சி நிலையம் | பயிற்சியளிக்கவுள்ள பாடநெறி |
|---|---|
| 1. கோப்பாய் கிறீஸ்தவக் கல்லூரி | வீட்டு மின் இணைப்பு, மின் ஒட்டு வேலை வானொலி திருத்துதல், ரீ.வி. திருத்துதல் |
| 2. யா/கனகரெத்தினம் ம. ம. வித். | மோட்டார் பொறித் தொழில், உடையமைத்தல், ஆங்கிலத் தட்டெழுத்து, தமிழ் தட்டெழுத்து, ஹொட்டல் றேட்ஸ். |
| 3. யா/அச்சுவேலி புனித திரேசா மகளிர் வித்தி. | உடையமைத்தல், ஹொட்டல் றேட்ஸ் |
| 4. யா/ஆவரங்கால் நடராஜா இராமலிங்கம் வித். | மேசன் தொழில் |
| 5. யா/புத்தூர் சோமாஸ்கந்தா கல்லூரி. | பனையோலை பொருள் உற்பத்தி. தமிழ் தட்டெழுத்து |
| 6. யா/தேவரயாளி இந்துக் கல்லூரி. | மரத்தளபாட உற்பத்தி, வீட்டு மின் இணைப்பு, மோட்டார் பொறித் தொழில், உடையமைத்தல், ஆங்கிலத் தட்டெழுத்து |
| 7. யா/ மெதடிஸ்ற் பெண்கள் கல்லூரி. | உடையமைத்தல், ஆங்கிலத் தட்டெழுத்து, தமிழ் தட்டெழுத்து |
| 8. யா / வைத்தீஸ்வரா வித்தியாலயம். | மோட்டார் றீ வைண்டிங், மின் உபகரணங்கள் உற்பத்தியும் பழுது பார்த்தலும், பத்திரிகைச் செய்தியாளர். |
| 9. யா / நாவலர் மகா வித்தியாலயம். | மரச்சிற்ப வேலையும், கைப்பணிப்பொருள் உற்பத்தியும், கட்புல சாதனங்கள் ஆக்கல், பட்டுத்திரை அச்சிடல் |
| 10. யா / இந்துக் கல்லூரி. | படவரைஞர் பயிற்சி, வாகன மின் இணைப்பு, ரீ. வீ. திருத்துதல், இலத்திரனியல் உபகரணங்கள் ஆக்கல் |
| 11. யா / வேம்படி மகளிர் கல்லூரி. | ஹொட்டல் றேட்ஸ், சமையற்கலை, ஆங்கில தட்டெழுத்து |
| 12. யா / மத்திய கல்லூரி. | குளிர் சாதனப்பெட்டி, காற்று பதனிடு கருவி திருத்துதல் வானொலி திருத்துதல், |
| 13. யா / கொக்குவில் இந்துக் கல்லூரி. | விவசாய உபகரணங்கள் பழுது பார்த்தல். மோட்டார் சைக்கிள் திருத்துதல் |
| 14. யா / இணுவில் சைவப்பிரகாச மகா வித்தியாலயம் | உடையமைத்தல், |
| 15. யா / இணுவில் அ. மி. த. க. பாடசாலை | உடையமைத்தல், |
| 16. யா / இணுவில் சைவ மகாஜனா வித்தியாலயம் | வீட்டு மின் இணைப்பு, |
| 17. யா / இராமநாதன் கல்லூரி | ஹொட்டல் றேட்ஸ், விவசாய விஞ்ஞானம் |
| 18. யா / மயிலணி மகா வித்தியாலயம் | மோட்டோர் பொறித் தொழில். |
| 19. யா / மல்லாகம் மகா வித்தியாலயம் | ஆங்கில தட்டெழுத்து, ஹொட்டல் றேட்ஸ், உடையமைத்தல் |
| 20. யா / மானிப்பாய் இந்துக் கல்லூரி | படவரைஞர் பயிற்சி, ஆங்கில தட்டெழுத்து. மோட்டார் றீ வைண்டிங் |
| 21. யா / வட்டு இந்துக் கல்லூரி | உடையமைத்தல் |

## சிவராத்திரி விழா

(யாழ்ப்பாணம்)

திருக்கேதீஸ்வரத்தில் இம்முறை சிவராத்திரிவிழா சிறப்பாக நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த கால சம்பவங்களினால் சிவராத்திரிவிழா திருக்கேதீஸ்வரத்தில் ஒழுங்காக நடைபெறவில்லை.

## சுத்தமாகும் யாழ்நகர்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபைக்கு உட்பட்ட பகுதிகளை சுத்தப்படுத்தும் வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

கடந்த கால சம்பவங்களினால் உடைந்த கட்டடங்கள் அசுத்தமடைந்த பகுதிகளை துப்பரவு செய்யும் நோக்குடன் 'விசேட சுத்திகரிப்பு' என்ற பெயரில் சின்னக்கடை,


# கொம்பியூட்டர் கல்வி

**Diploma in Computer Programming & Data Processing Basic Language**

4 MONTHS WEEKENDS

COMMENCEMENT - 25 - 02 - 1990

**FEES ONLY Rs. 300/- PER MONTH**

★ LECTURES BY MEMBERS OF THE INSTITUTE OF DATA PROCESSING MANAGEMENT (London)

★ PRACTICALS ON I. B. M. COMPATILES

★ VALUABLE CERTIFICATE

★ தமிழிலும் விளக்கங்கள்

**C. I. M. A., I. A. B. Shorthand & Typing** நடைபெறுகின்றன.

**SCHOOL OF BUSINESS ADMINISTRATION**

(Leaders in Computer Education)

| | |
|---|---|
| | ஆங்கிலத் தட்டெழுத்து |
| | உடையமைத்தல், ஆங்கிலத் தட்டெழுத்து, |
| 7. யா/ மெதடிஸ்ற் பெண்கள் கல்லூரி. | தமிழ் தட்டெழுத்து |
| | மோட்டார் ரீ வைண்டிங், மின் உபகரணங்கள் உற்பத்தியும் |
| 8. யா / வைத்தீஸ்வரா வித்தியாலயம். | பழுது பார்த்தலும், பத்திரிகைச் செய்தியாளர். |
| | மரச்சிற்ப வேலையும், கைப்பணிப்பொருள் உற்பத்தியும், |
| 9. யா / நாவலர் மகா வித்தியாலயம். | கட்புல சாதனங்கள் ஆக்கல், பட்டுத்திரை அச்சிடல் |
| | படவரைஞர் பயிற்சி, வாகன மின் இணைப்பு, ரீ. வீ. |
| 10. யா / இந்துக் கல்லூரி. | திருத்துதல், இலத்திரனியல் உபகரணங்கள் ஆக்கல் |
| | ஹொட்டல் றேட்ஸ், சமையற்கலை, ஆங்கில தட்டெழுத்து |
| 11. யா / வேம்படி மகளிர் கல்லூரி. | குளிர் சாதனப்பெட்டி, காற்று பதனிடு கருவி திருத்துதல் |
| 12. யா / மத்திய கல்லூரி. | வானொலி திருத்துதல், |
| | விவசாய உபகரணங்கள் பழுது பார்த்தல். |
| 13. யா / கொக்குவில் இந்துக் கல்லூரி. | மோட்டார் சைக்கிள் திருத்துதல் |
| 14. யா / இணுவில் சைவப்பிரகாச மகா வித்தியாலயம் | உடையமைத்தல், |
| 15. யா / இணுவில் அ. மி. த. க. பாடசாலை | உடையமைத்தல், |
| 16. யா / இணுவில் சைவ மகாஜனா வித்தியாலயம் | வீட்டு மின் இணைப்பு, |
| 17. யா / இராமநாதன் கல்லூரி | ஹொட்டல் றேட்ஸ், விவசாய விஞ்ஞானம் |
| 18. யா / மயிலணி மகா வித்தியாலயம் | மோட்டோர் பொறித் தொழில். |
| 19. யா / மல்லாகம் மகா வித்தியாலயம் | ஆங்கில தட்டெழுத்து, ஹொட்டல் றேட்ஸ், |
| | உடையமைத்தல் |
| | படவரைஞர் பயிற்சி, ஆங்கில தட்டெழுத்து. |
| 20. யா / மானிப்பாய் இந்துக் கல்லூரி | மோட்டார் ரீ வைண்டிங் |
| | உடையமைத்தல் |
| 21. யா / வட்டு இந்துக் கல்லூரி | தோற்பொருள் உற்பத்தி |
| 22. யா / முத்துத்தம்பி மகா வித்தியாலயம் | உலோகப் பொருள் உற்பத்தி, ஆங்கில தட்டெழுத்து |
| 23. யா / விக்ரோறியா கல்லூரி | வீட்டு மின் இணைப்பு, மின் ஒட்டுவேலை, உடையமைத்தல் |
| 24. யா / சேர் வைத்திலிங்கம் துரைசாமி ம, ம. வித்தி. | ஆங்கில தட்டெழுத்து, தமிழ் தட்டெழுத்து சுருக்கெழுத்து |
| | உடையமைத்தல், வாகனங்களுக்கான மின் இணைப்பு |
| 25. யா / டிறிபேக் கல்லூரி, சாவகச்சேரி. | ஆங்கில தட்டெழுத்து |
| | வீட்டு மின் இணைப்பு |
| 26. யா / கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலயம் | புத்தகம் கட்டுதலும் காகிதப் பொருள் உற்பத்தியும், |
| 27. யா / நல்லூர் சீ. சீ. ரீ. எம். எஸ். | மோட்டார் படகு திருத்துதல், தும்புத் தொழில், |
| 28. யா / பாசையூர் புனித அந். கல்லூரி | உணவு பதனிடல். |
| 29. யா / கைதடி விக்கினேஸ்வரா வித்தியாலயம் | |

## மாதிரி விண்ணப்பப் படிவம்

### யாழ்ப்பாணம் கல்வித்திணைக்கள முறைசாராக் கல்விப் பிரிவுகளில் சேர்வதற்கான விண்ணப்பம்

1. கற்க விரும்பும் பாடநெறி :-..............................................................
2. கற்க விரும்பும் பாடசாலை ;-..............................................................
3. முழுப்பெயர் :-.............................................................. பிறந்த திகதி:-....................
4. நிரந்தர முகவரி :-.............................................. வயது :-....................
5. தேசிய அடையாள அட்டை இலக்கம் :-.............................. பால் :- ....................
6. இறுதியாகக் கற்று விலகிய பாடசாலையும் விலகிய திகதியும் :-..............................
7. அகதிகளாக இந்தியா சென்று உத்தியோகபூர்வமாக இலங்கை திரும்பியிருப்பின் அடையாள அட்டை இலக்கமும் திகதியும் ;-..............................
8. அகதிகளாக இந்தியா சென்று உத்தியோகபூர்வமற்ற முறையில் திரும்பியிருப்பின் திரும்பிய திகதி :-
9. ஜனசக்தித் திட்டக் குடும்பத்தில் நீர் அங்கத்தவரா :- ....................
10. உள்ளூரில் இடம் பெயர்ந்தவரா :-....................
11. தற்போது ஏதாவது தொழில் புரிகிறீரா :- .................... எங்கு ;-.................... எத்துறையில் :-....................
12. வேறுதொழில் நுட்பத் தகைமைகள் பெற்றிருப்பின் குறிப்பிடுக :-....................

.............................................. பெற்றோர் / பாதுகாவலர் ஒப்பம்

.............................................. விண்ணப்பதாரியின் ஒப்பம்

திகதி :-... ..................

**கல்வித் தகைமைகள்:**

1. ஆங்கில சுருக்கெழுத்தும், தட்டச்சும் க. பொ. த. சாதாரணதரம் சித்தி (ஆங்கில பாடத்தில் சீ தரத்தில் உட்பட)
2. படவரைஞர் ஆங்கில மொழி மூலம் கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம் சீ தரமுட்பட க. பொ. த. சாதாரண சித்தி
3. ஹொட்டல் ரேட்ஸ் ஆங்கிலம் / தமிழ்மொழி மூலம்---ஆண்டு 10 சித்தி
4. வானொலி திருத்துதல், எலத்திரனியல் உபகரணங்கள் ஆக்கல் கணிதம், விஞ்ஞானம் உட்பட க, பொ. த. சாதாரண தரம் சித்தி
5. தமிழ் தட்டெழுத்து / சுருக்கெழுத்து தமிழ் சீ தரமுட்பட க. பொ. த. சாதாரண தரம் சித்தி
6. ஏனைய பாடநெறிகள் தரம் 8 சித்தி
7. தொலைக் காட்சி திருத்துதல் ஏற்கனவே வானொலி திருத்துதல் நெறியைக் கற்றவர்களுக்கு மட்டும் கணிதம், விஞ்ஞானம் சீ தரம் உட்பட க. பொ. த சாதாரண தரம் சித்தி
8. பத்திரிகைச் செய்தியாளர்: தமிழ் ''சீ'' தரம் ஆங்கிலம் ''எஸ்'' தரமுட்பட க. பொ. த. சாதாரண சித்தி.

செல்வி. தி. பெரியதம்பி

பிரதிக் கல்விப் பணிப்பாளர், கல்வித் திணைக்களம், யாழ்ப்பாணம்.

கடந்த கால சம்பவங்களினால் சிவராத்திரிவிழா திருக்கேதீஸ்வரத்தில் ஒழுங்காக நடைபெறவில்லை.

## சுத்தமாகும் யாழ்நகர்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபைக்கு உட்பட்ட பகுதிகளை சுத்தப்படுத்தும் வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

கடந்த கால சம்பவங்களினால் உடைந்த கட்டடங்கள் அசுத்தமடைந்த பகுதிகளை துப்பரவு செய்யும் நோக்குடன் 'விசேட சுத்திகரிப்பு' என்ற பெயரில் சின்னக்கடை, குருநகர், நாவாந்துறை, நல்லூர், பாஷையூர், அரியாலை ஆகிய யாழ். மாநகரசபை எல்லைக்குள் அடங்கும் பகுதிகளை சுத்தப்படுத்தும் வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்படும் என்று யாழ். மாநகர சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## நிர்வாகிகள்

கொழும்புத்துறை பெப்-19 உலகத்தமிழ்ப் பண்பாட்டு இயக்க இலங்கைக்கிளையின் வருடாந்தப் பொதுக் கூட்டம் இயக்கப்பணிமனையில் தலைவர் சட்டத்தரணி திரு. பொன் பூலோகசிங்கம் தலைமையில் நடைபெற்றது.

பின்வருவோர் நடப்பு வருடப் புதிய நிர்வாகிகளாக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர் :- திரு. எஸ். வின்சென்ற், தலைவர் சட்டத்தரணி திரு. பொன். பூலோகசிங்கம், உபதலைவர் திரு. வே. கெ. தனபாலன், இணைச் செயலாளர்கள் திரு செ. பரமானந்தன், திரு. சி. சி. வரதராசா, பொருளாளர் திரு. இ. தவகோபால், உலகத்தமிழன் குரல் பத்திரிகை ஆசிரியர் திரு. க. சண்முகலிங்கம், பிரசாரப் பொறுப்பாளர் வைத்திய கலாநிதி சி. சற்குருநாதன்.

## உலக தமிழ் மருத்துவ கல்லூரி

மொரீசியஸ் தீவில் உலக தமிழ் மருத்துவக் கல்லூரி ஒன்றை நிறுவுவதற்கான அங்குரார்ப்பணக் கூட்டம் எதிர் வரும் 25ஆம் திகதி நடைபெறவிருக்கின்றது. உலக தமிழ் மறுமலர்ச்சி சம்மேளனமே இக்கல்லூரியை நிறுவுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.


& Data Processing
Basic Language

4 MONTHS WEEKENDS
COMMENCEMENT - 25 - 02 - 1990
FEES ONLY Rs. 300/- PER MONTH

★ LECTURES BY MEMBERS OF THE INSTITUTE OF DATA PROCESSING MANAGEMENT (London)
★ PRACTICALS ON I. B. M. COMPATILES
★ VALUABLE CERTIFICATE
★ தமிழிலும் விளக்கங்கள்

C. I. M. A., I. A. B. Shorthand & Typing நடைபெறுகின்றன.

SCHOOL OF BUSINESS ADMINISTRATION
(Leaders in Computer Education)
16, 3 rd CROSS STREET,
(West of O. L. R. Church)
JAFFNA.

மில்க்வைற் MWS MILKWHITE இலச்சினை

தொழில் பெருக்கி வளம் பெருக்கி
மக்கள் வாழ்வினைப் பெருக்கிட
உள்ளூர் உற்பத்தியை ஊக்குவிப்போம்.
நாளும் நற்பணி புரிந்திட
நமக்கு ஆதரவு தாருங்கள்.
சுடர் விளக்காயினும் தூண்டுகோல்
ஒன்று வேண்டுமல்லவா?

மில்க்வைற் மேலுறையிலிருந்து 25 திருக்குறள் அனுப்பி ''மாணவர் செய்திட்டம்'' பிரசுரத்தையும் ''உழைப்பே உயர்வுக்கு வழி'' காந்தி ஸ்ரிக்கரும் பெற்றுப் பயனடைக.

மில்க்வைற் - யாழ்ப்பாணம்.


## படைப்புகள் வரவேற்கப்படுகின்றன!

எமது ஈழநாதம் பத்திரிகையில் பிரசுரிப்பதற்கு எழுத்தாளர்களிடமிருந்து ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

எழுத்தாளர்கள் அறிவியல், அரசியல், தொழில்நுட்பம், விஞ்ஞானம், மருத்துவம், கலை, இலக்கியம் போன்றவற்றுடன் சம்பந்தமுடைய கதை, கட்டுரை, கவிதைகளை எழுதி அனுப்பலாம்.

தரமான ஆக்கங்கள் பிரசுரிக்கப்படுவதோடு அவற்றிக்கான சன்மானமும் வழங்கப்படும்.

அனுப்பவேண்டிய முகவரி

ஆசிரியர்
'ஈழநாதம்'
31, வைமன் வீதி, யாழ்ப்பாணம்.

# 20ஆம் நூற்றாண்டின் விடுதலை வீரன் மண்டேலா

நெல்சன் மண்டேலா- இச்சொல்லானது ஒருதனி நபரின் பெயரை தாங்கி நிற்பதற்கும் மேலாக, ஒரு நீண்ட கால சிறை வாழ்வையும், ஒடுக்கப்படும் தென்னாபிரிக்க மக்களையும், ஆபிரிக்க தேசிய காங்கிரசையும். ஓர் உறுதியின் உறைவிடத்தையுமே வெளிக்கொணரக்கூடிய அர்த்தத்தில் மக்கள் மத்தியில் பிரபல்யமடைந்துவிட்டது. அந்த அளவிற்கு நவீன வரலாற்றில் தவிர்க்க முடியாத இடத்தினை நெல்சன் மண்டேலா பெற்றுவிட்டார்.

1918 ஜூலை 18-ம் நாள் தென்னாபிரிக்காவின் டிரான்ஸ்கோய் பகுதியிற் பிறந்து, தென்னாபிரிக்க பல்கலைக்கழகத்தில் கற்று வழக்கறிஞராக வெளியேறிய இவர் 1943 இல் ஆபிரிக்க தேசிய இளைஞர் காங்கிரஸ் லீக் என்ற இயக்கத்தை ஆரம்பித்து, வால்டர் கிஸ்லு, ஒலிவர் டாம்போ போன்ற தலைவர்களுடன் இணைந்து செயற்பட்டதன் மூலம் ஆபிரிக்க தேசிய காங்கிரசை ஒரு மக்கள் இயக்கமாக மாற்றினார். இதன் பின் அவ் அமைப்பு தடை செய்யப்பட்டு, 1964 ஜூன் 12-ம் நாள் மண்டேலாவுக்கு ஆயுட் கால சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. இந்நடவடிக்கை ஆபிரிக்க மக்களின விடுதலைத்தீயில் ஊற்றிய நெய்யாக மாறியது.

ஒரு கருத்தை முன்வைப்பது இலகுவானது ஆனால், அதற்கு செயலுருவம் கொடுப்பது அவ்வாறான தன்மை கொண்டதல்ல. அவ்வாறு நோக்கும் போது அவரிடம் காணப்பட்ட விடாப்பிடியான தன்மை, மனப்பலம், பொறுமை, எதற்கும் முகம் கொடுக்கும் திராணி, மக்களுக்காக, மனிதகுல விடிவுக்காக என்ற மகோன்னத நோக்கு முதலிய அம்சங்களே அவரை ஒரு வித்தியாசமான வரலாற்றுச் சின்னமாக மாற்றிய சக்திகளெனலாம்.

மண்டேலா அவர்கள் ஆபிரிக்க மக்களின் விடுதலையில் வைத்திருந்த பிரிக்கமுடியாத அக்கறையை விளக்குவதாயின் ''எனது வாழ்நாளையே நான் ஆபிரிக்க மக்களின் போராட்டத்திற்கென அர்ப்பணித்துள்


கதிர் வீச்சுக்களால் பாதிக்கப்பட்டிருக்கும் ஐக்கிய நாடுகள் சபைகூட எல்லாவற்றையும் மீறி மண்டேலாவின் விடுதலையை உலக அரங்கிற் கோரி நின்றன.

தென்னாபிரிக்காவின் 90% நிலப்பரப்பு 50 லட்சம் வெள்ளையருக்குரியதென குறிசுடப்பட்டிருக்க, 2 1/2 கோடி மண்ணின் மைந்தர்களான கறுப்பினத்தவர்கள் 10% மான நிலத்திற்குள் அடக்கப்பட்டுள்ளனர். இத்தகைய கொடுமைகளுக்காக, துயரங்களுக்காக, பாரபட்சமான தீர்வுக்காக, ஒரு தனி நபரால் எவ்வாறு நின்று பிடிக்க முடிந்ததோ? என்ற கேள்விக்குப் பதில் மண்டேலா தான். அவருக்கு நிகர் அவரே என்பதை அவரது 27 வருடகால பொறுமை நிரூபித்து விட்டது. அந்த காலகட்டத்தின் ஒவ்வொரு வினாடியும் மண்டேலாவை ஓர் உயர்ந்த மனிதராக வளர்த்துக் கொண்டிருந்தது. புவியியல் ரீதியாக 'இருண்ட கண்டம்' என வர்ணிக்கப்படும் ஆபிரிக்கா மண்டேலாவின் விடுதலையின் பின் ஒளி பெறத்தான் போகிறது.

போதுமானதாக இருந்த போதிலும் அவர் அதனை செய்ய மறுத்தார். அதுவே அவரது தனித்துவமாகும்.

மக்களின் விடிவிற்காக மக்கள் அனுபவிக்கும் துன்ப துயரங்களையெல்லாம் அனுபவிக்க யார் தயாராகிறானோ அவனே உண்மையான மக்கள் தலைவனாக இருக்க தகுதியுடையவனாகிறான். அந்த நிலையிலிருந்து மண்டேலாவை பிரித்துப் பார்க்க முடியாது. ஒரு கருத்துக்கு விசுவாசமாக இருந்த சேர்க்கிரட்டீஸ் தமகால வாழ்வை இழந்தார். ஆனால் இற்றை வரை எல்லோரது சிந்தனைகளிலும் வாழ்ந்து கொண்டிருக்கிறார். அதே போல ஒரு கொள்கைக்காக தனது சமகால வாழ்வை இழந்த மண்டேலா எதிர்காலத்தில் தொடர்ச்சியாக வாழ்ந்து கொண்டிருப்பார். அந்த மனிதர் வாழ்ந்த சமகாலத்தில் வாழும் அனைத்து மக்களுமே






# அமெரிக்காவின் கொன்றாஸ்

# இந்தியாவின் தமிழ்தேசிய இராணுவம்

தேசிய இராணுவம் என்பது ஒரு சட்டவிரோதமான அமைப்பு மட்டுமல்ல அது ஒரு எதிர்ப் புரட்சிகர நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டு வரும் தேசவிரோதக் கும்பலுமாகும். இத்தகைய எதிப் புரட்சிகர சக்திகளை எல்லா ஏகாதிபத்தியங்களும் தங்கள் தேவைக்கு உருவாக்கி வந்துள்ளன. அமெரிக்க ஏகாதிபத்தியம் நிக்கரகுவாவிலுள்ள முற்போக்கு இடதுசாரி அரசைக் கவிழ்க்க ''கொன்றாஸ்'' படையினரை உருவாக்கியது. கெரில்லாப் போராட்டங்களை முறியடிப்பதற்காக எல்லா ஏகாதிபத்தியங்களும் அதே இனத்தைச் சேர்ந்தவர்களைக் கொண்டே இத்தகைய எதிர்ப் புரட்சிகர சக்திகளை உருவாக்கி வருவதையே இப்

பிராந்தியத்தில் பிராந்திய வல்லரசவாதத்தை வளர்த்தெடுப்பதில் அக்கறையாகவுள்ளது. இந்த ''றோ'' அமைப்பு ஈழத்தில் இலங்கை அரசின் எதிர்ப்புக்கு மத்தியில் உருவாக்கக் காரணம் தமிழ் இளைஞர்களை ஒருவரோடு ஒருவர் மோதவிட்டு அழிப்பதன்மூலம் போராட்ட சக்திகளை முற்றாக அழிப்பதோடு இளைஞர் சக்தியை நாட்டைவிட்டுத் துரத்தியடிப்பதன் மூலம் போராட்டத்தை நசுக்கிவிடலாம் என்று இந்தியா கருதியது. இளைஞர்களதும் மாணவர்களதும் விருப்பத்திற்கு மாறாக அவர்களைப் பிடித்து அவர்கட்கு கட்டாய இராணுவப்பயிற்சி கொடுத்து களத்திற்கு கொண்டு சென்று அவர்களைப் பலிக்கடாக்களாக்குவதன்நோக்கம் இதுவே

எதிர்காலத்தில்கூட ஒரு போராட்டமையம் உருவாகாதபடி உளவியல் ரீதியான ஒரு பின்னடைவை தமிழ் மக்கள் மனதில் ஏற்படுத்த இந்த தேசிய இராணுவம் என்ற படையை உருவாக்கியது.

## அமெரிக்க ஏகாதிபத்தியம் கற்றுக்கொடுத்த பாடம்

அமெரிக்க ஏகாதிபத்தியம் மூன்றாம் உலக நாடுகளை எப்போதுமே வளர்ச்சியடையாத நிலையில் வைத்துக்கொள்ள உள்நாட்டு விவகாரங்களில் எத்தகைய தந்திரோபாயங்களைக் கையாண்டதோ அத்தகைய யுக்திகளையே இந்தியா இலங்கைத் தமிழர் விடயத்திலும் கையாண்டது. அமெரிக்க உளவுஸ்தாபனமான சி. ஐ. ஏ. யின்

மக்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்கவே உருவாக்கப்பட்டுள்ளதாக இந்தியாவும் அதன் பொம்மை முதலமைச்சரும் கூறிவருகிறார்கள். ஆனால் யதார்த்த நிலைமயே வேறாகவேயுள்ளது. இந்தப் படை உருவாக்கத்தால் தமிழ் மக்கள் நிதர்சனமாகவே தமது பாதுகாப்பை முற்றுமுழுதாகவே இழந்தார்கள். தமது உயிருக்கும் உடமைக்கும் பாதுகாப்பு இல்லை என்பதனால் பெருமளவிலான தமிழர்கள் இடப்பெயர்ச்சிக்குள்ளானார்கள். சுமார் 16 வயதிற்கு மேற்பட்ட 22 வயதிற்குட்பட்ட 25,000 வாலிபர்கள் கொழும்பிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் வடக்கு - கிழக்கு மாகாணத்திலிருந்து இடம் பெயர்ந்து சென்று தஞ்சம் அடைந்தார்கள். கட்டாய இராணுவப் பயிற்கிக்கு ஆட்கள் சேர்க்கப்பட்டமையால் இவ்வாறு புகலிடம் கோரிய தமிழ் இளைஞர்களுக்கு பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியில் ஒரு பராமரிப்பு முகாம் திறக்கப்பட்டது. இந்தப்படை உண்மையில் தமிழ் மக்களைப் பாதுகாக்க அமைக்கப்பட்ட படையல்ல.

றிய நெறியாக மாறியது.

ஒரு கருத்தை முன்வைப்பது இலகுவானது ஆனால், அதற்கு செயலுருவம் கொடுப்பது அவ்வாறான தன்மை கொண்டதல்ல. அவ்வாறு நோக்கும் போது அவரிடம் காணப்பட்ட விடாப்பிடியான தன்மை, மனப்பலம், பொறுமை, எதற்கும் முகம் கொடுக்கும் திராணி, மக்களுக்காக, மனிதகுல விடிவுக்காக என்ற மகோன்னத நோக்கு முதலிய அம்சங்களே அவரை ஒரு வித்தியாசமான வரலாற்றுச் சின்னமாக மாற்றிய சக்திகளெனலாம்.

மண்டேலா அவர்கள் ஆபிரிக்க மக்களின் விடுதலையில் வைத்திருந்த பிரிக்கமுடியாத அக்கறையை விளக்குவதாயின் ''எனது வாழ்நாளையே நான் ஆபிரிக்க மக்களின் போராட்டத்திற்கென அர்ப்பணித்துள்ளேன். வெள்ளை ஆதிக்கத்தையும், கறுப்பு ஆதிக்கத்தையும் எதிர்த்து, நான் போராடுகிறேன். எல்லா மனிதர்களும் சம வாய்ப்புக்களுடன் இணைந்து வாழும் சுதந்திர, ஜனநாயக சமுதாயமே எனது இலட்சியம். அந்த இலட்சியத்திற்காகவே நான் வாழ விரும்புகிறேன். அந்த இலட்சியத்தை என் மக்கள் அடையும் பொருட்டு நான் உயிர் விடவும் தயார்'' என அவரே குறிப்பிட்ட கருத்து போதுமானது.

தென்னாபிரிக்காவின் கடும்போக்கு அரசின் முன்னாள் தலைவரான போத்தா பல நிபந்தனைகளுக்குட்பட்ட விதத்தில் மண்டேலாவுக்கு விடுதலை அளிக்க முன் வந்தார். அதாவது அவரது சொந்த ஊரான டிரான்ஸ்கோய்க்கு செல்ல வேண்டும். அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடாது, பொதுக் கூட்டங்களில் பேசக்கூடாது, எந்தக் கட்சியிலும் சேரக்கூடாது என்பனவே அந்தக் கட்டுப்பாடுகளாகும். ஆனால் அவை அனைத்தையும் ஒரே முறையில் எதிர்க்கும் முகமாக தனது சுதந்திரமற்ற விடுதலையை முற்றாக நிராகரித்து, நியாயத்தின் பேரில், மக்களுக்காக எல்லாத் துன்பங்களையும் அனுபவித்தார். அந்த இடத்திற்தான் தன் உயிரை விட சுதந்திரத்தை பெரிதாக மதித்ததை காண முடிகிறது. அவரது நியாயமான தன்மைகளுக்கு ஒப்புக்கொள்ளும் வகையில் காமன்வெல்த் நாடுகளின் சபை, ஐரோப்பிய குழு, போன்றவற்றுடன் வல்லரசுகளின்



''புரட்சியாளரை அழிப்பதன் மூலம் புரட்சியை அழித்து விட முடியாது'' என்ற கொள்கையில் மண்டேலா தளராதிருந்தார். ஒரு கருத்துக்கு வடிவம் கொடுத்தது மட்டுமல்லாமல் அதனையே ஒரு நவீன போராட்ட 'சித்தாந்தமாக' மாற்றி விடுமளவிற்கு அவர் நான்கு சுவருக்குள்ளிருந்து செயற்பட்டார். அந்த வகையில் அவர் சிறைக்குள் இருந்தாலென்ன வெளியேறினாலென்ன மக்கள் எழுச்சியென்பது நிச்சயமான ஒன்று என்பதை நிதர்சனமாக்கினார். முழு மக்களும் நம்பிக்கை வைத்து செயற்படுமளவிற்கு அவரது மனவுறுதி இருந்தது. மண்டேலா நான்கு சுவருக்கிடையில் ஒரு முக்கியத்துவமற்ற இடத்தில் அடைத்து வைக்கப்பட்டிருந்த போதிலும் அவர் பற்றிய செய்திகள் மட்டும் யாராலும் அடைக்க முடியாத அளவிற்கு எல்லா மொழிகளின் ஒலி அலைகளிலும் மிதந்து வந்து கொண்டிருந்தது. முகம் தெரியாத கோடிக்கணக்கான மக்களின் இதயங்களில் மண்டேலா வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

ஏகாதிபத்திய அரசுகளின் செல்லப் பிள்ளையான தென்னாபிரிக்க அரசால் எதுவும் செய்ய முடியாத அளவிற்கு மக்கள் ஆதரவு அவருக்கு இருந்ததென்பதில் ஐயமில்லை விடுதலையாவதற்கு சிறிய விட்டுக்கொடுப்புக்களே

இக்கால கட்டத்தில் வாழ்ந்தோம் என்பதற்காக பெருமைப்பட்டுக் கொள்ள முடியும்.

போராட்டத்தை பின்னடைய வைக்கலாமென தென்னாபிரிக்க இனவெறி அரசு கருதியதற்கு மாறாக அந்த மக்களின் உண்மையான போராட்டத்தை வளர்த்து விட்டதாகவே அமைந்து விட்டது. வயோதிப காலத்தில் தென்னாபிரிக்க அரசு மண்டேலவை விடுதலைசெய்தபோதிலும்; போராட்ட சிந்தனையில் முதிர்ச்சியும் செயற்பாட்டில் இருபத்தேழு வயதுள்ள இளைஞராகவும் காணப்படுகிறார்.

-எல்லாளன்

## மாகாணசபை நிதி நிலைமை

வட-கிழக்குமாகாணத்திற்கு இவ்வாண்டுமத்திய அரசினால் ஒதுக்கப்பட்ட நிதி 318 கோடி ஐம்பது லட்சம்ரூபா என நிதி அமைச்சர் பெ. கிருபாகரன் நேற்று முன் தினம் இடம்பெற்ற மாகாண சபையின் வரவு செலவுத்திட்ட அமர்வின் போது கூறினார். மாகாணசபையின் இவ்வாண்டு வருமானம் 7 கோடியே 50 லட்சம் ரூபா எனவும் தெரிவிக்கப்பட்டது. சபைக்கு உறுதி அளிக்கப்பட்டு கடந்த வருடம்வழங்கப்படாதிருந்த 2 கோடியே 50 லட்சம்ரூபாவினை இவ்வாண்டு அரசு வழங்குமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய இராணுவம் என்பது ஒரு சட்டவிரோதமான அமைப்பு மட்டுமல்ல அது ஒரு எதிர்ப் புரட்சிகர நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டு வரும் தேசவிரோதக் கும்பலுமாகும். இத்தகைய எதிர்ப் புரட்சிகர சக்திகளை எல்லா ஏகாதிபத்தியங்களும் தங்கள் தேவைக்கு உருவாக்கி வந்துள்ளன. அமெரிக்க ஏகாதிபத்தியம் நிக்கரகுவாவிலுள்ள முற்போக்கு இடதுசாரி அரசைக் கவிழ்க்க ''கொன்றாஸ்'' படையினரை உருவாக்கியது. கெரில்லாப் போராட்டங்களை முறியடிப்பதற்காக எல்லா ஏகாதிபத்தியங்களும் அதே இனத்தைச் சேர்ந்தவர்களைக் கொண்டே இத்தகைய எதிர்ப் புரட்சிகர சக்திகளை உருவாக்கி வருவதையே இப்போது தமது நவீன தந்திரோபாயமாகக் கருதுகிறார்கள். இந்த வகையில் இந்திய ஏகாதிபத்தியம் தமிழ்த் தேசியப் போராட்டத்தை முறியடிப்பதற்காக தனது உளவு ஸ்தாபனமான ''றோ'' மூலம் உருவாக்கிய எதிர்ப்புரட்சிகர சக்திகளே இந்தத் தேசிய இராணுவமாகும். இந்த உளவு ஸ்தாபன அதிகாரிகளில் ஒருவராகிய சந்திரன் என்ற சந்திரசேகரம் என்பவரின் நேரடிக் கண்காணிப்பில் இந்தத் தேசிய இராணுவம் உருவாக்கப்பட்டது. இந்திய அரசால் இப்படைக்கு நிதி உதவியும் இந்திய இராணுவ அதிகாரிகளால் இராணுவப்பயிற்சியும் இவர்களுக்கு அளிக்கப்பட்டது.

### உருவாக்கத்தின் நோக்கம்

இந்திய அரசு எப்போதுமே தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு எதிரான நிலைப்பாட்டையே தனது வெளியுறவுக் கொள்கையாகக் கொண்டுள்ளது. இந்தியாவைப் பொறுத்து அரசாங்கம் மாறினாலும் அணுகு முறைகளில் மாற்றம் ஏற்படுமே தவிர அடிப்படை வெளியுறவுக் கொள்கையில் மாற்றம் ஏற்படுவது குறைவு. ஏனெனில் இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையை வெளியுறவு செயலர்களும் இந்திய இராஜதந்திர வட்டாரங்களும் இணைந்தே தீர்மானித்து வருகின்றன. ஆரம்பத்தில் இந்திரா காந்தியால் பாக்கிஸ்தான், சீனா போன்ற நாடுகளின் ஊடுருவல்களை உளவு பார்க்க அமைக்கப்பட்ட 'றோ' என்ற இந்தஉளவுஸ்தாபனம் இன்று தெற்காசியப் பிராந்தியத்தில் பிராந்திய வல்லரசவாதத்தைவளர்த்தெடுப்பதில் அக்கறையாகவுள்ளது. இந்த ''றோ'' அமைப்பு ஈழத்தில் இலங்கை அரசின் எதிர்ப்புக்கு மத்தியில் உருவாக்கக்காரணம் தமிழ் இளைஞர்களை ஒருவரோடு ஒருவர் மோதவிட்டு அழிப்பதன்மூலம் போராட்ட சக்திகளை முற்றாக அழிப்பதோடு இளைஞர் சக்தியை நாட்டைவிட்டுத் துரத்தியடிப்பதன் மூலம் போராட்டத்தை நசுக்கிவிடலாம் என்று இந்தியா கருதியது. இளைஞர்களதும் மாணவர்களதும் விருப்பத்திற்கு மாறாக அவர்களைப் பிடித்து அவர்கட்கு கட்டாய இராணுவப்பயிற்சி கொடுத்து களத்திற்கு கொண்டு சென்று அவர்களைப் பலிக்கடாக்களாக்குவதன்நோக்கம் இதுவேயாகும்.

அடுத்ததாக, போராட்ட சக்திகளாக விளங்கும் விடுதலைப் புலிகளோடு இளைஞர் சக்தி ஒன்று சேர்ந்து போராட்டத்தை முன்னெடுக்க விடாது இடையூறுகளை விளைவித்து போராட்டத்தை ஒரு ஸ்தம்பித நிலையில் வைத்துக் கொள்வதன் மூலம் போராட்டம் தனியல்பாகவே அழிந்துவிடும் என இந்தியா எதிர்பார்த்தது.

மூன்றாவதாக, இந்தியா தனது இராணுவ நடவடிக்கைகளை விடுதலைப் புலிகள் மீதும் அவர்களது ஆதரவாளர்களை அழித்து ஒழிக்கும் கைங்கரியத்திலும் ஈடுபட்ட போது அது ஆரம்பத்தில் அவர்களுக்கு அநுகூலமாக அமையவில்லை என்பதோடு சர்வதேச வெகுஜனத் தொடர்புச் சாதனங்கள் மூலம் உருவாக்கப்பட்ட சர்வதேச அபிப்பிராயம் இந்தியாவை சர்வதேச அரங்கில் அம்பலப்படுத்தி இந்தியாவின் அணிசேராக் கொள்கையையும் பஞ்சசீலக் கோட்பாடுகளையும் கேலிக்குரியதாக்கின. இதனால் இந்தியா தனது இராணுவத்தைப் பயன்படுத்தி விடுதலைப் புலிகளை அழிப்பதிலும் பார்க்க கூலிப்படைகளைப் பயன்படுத்தி குழு மோதல்கள் என மூலாம்பூசி பிரசாரம் செய்வதோடு தமிழ் மக்கள் மத்தியில் ஒரு பயப்பிராந்தியை வளர்த்து மக்களுக்குப் போராட்டத்தின் மீதான வெறுப்பை உருவாக்கி போராட்டத்தின்மீது அவர்களுக்குள்ள நம்பிக்கையைச் சிதறடித்து விடுவதோடு எதிர்காலத்தில்கூட ஒரு போராட்ட மையம் உருவாகாதபடி உளவியல் ரீதியான ஒரு பின்னடைவை தமிழ் மக்கள் மனதில் ஏற்படுத்த இந்த தேசிய இராணுவம் என்ற படையை உருவாக்கியது.

### அமெரிக்க எகாதிபத்தியம் கற்றுக்கொடுத்த பாடம்

அமெரிக்க ஏகாதிபத்தியம் மூன்றாம் உலக நாடுகளை எப்போதுமே வளர்ச்சியடையாத நிலையில் வைத்துக்கொள்ள உள்நாட்டு விவகாரங்களில் எத்தகைய தந்திரோபாயங்களைக் கையாண்டதோ அத்தகைய யுக்திகளையே இந்தியா இலங்கைத் தமிழர் விடயத்திலும் கையாண்டது. அமெரிக்க உளவுஸ்தாபனமான சி. ஐ. ஏ. யின் திட்டங்களுக்கு அமெரிக்க வெளியுறவு செயலாளர்கள் வேலைத்திட்டம் வகுத்துக் கொடுக்க அமெரிக்க இராணுவம் அவற்றை இராணுவ ரீதியாக நடைமுறைப்படுத்துவது இயல்பு. வியட்னாமிலும் கிறனடாவிலும் இத்தகைய அமெரிக்க ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் கடந்த காலங்களில் இடம்பெற்றன. இதே வேளையில் அமெரிக்க ஜனாதிபதி இந்த சி ஐ.ஏ. யின் நடவடிக்கைகளை வெளியுலகில் அரசியல் ரீதியாக நியாயப்படுத்தும் செயல்களை மேற்கொண்டுவந்ததாக அமெரிக்க ஜனாதிபதி யான நிக்சன் வியட்னாம் பிரச்சினையிலும், றொனால்ட் றேகன் கிறனடா விடயத்திலும் இவ்வாறே செய்தனர். சிலியில் ஜனாதிபதி அலண்டேயின் மரணம் இதன் பின்னணியில் இடம்பெற்றதேயாகும். இதேபோல இந்திய உளவு ஸ்தாபனமான றோவின் உளவு வேலைகளுக்கு புதுடில்லியிலுள்ள வெளியுறவு செயலாளர்கள் திட்ட வடிவம் கொடுக்க இந்திய இராணுவம் அதனை இராணுவரீதியில் செயல்படுத்தியது. இந்திய இராணுவத்தின் செயல்பாடுகளை ராஜீவ் காந்தி அரசியல் ரீதியாக நியாயப்படுத்தி வந்ததை குறிப்பிடத்தக்கதாகும். இலங்கை, நேபாளம் போன்ற தென்னாசிய நாடுகளின் விவகாரங்களில் இந்தியாவின் அணுகுமுறை இப்படித்தான் இருந்தது.

### யாருக்குப் பாதுகாப்பு:

இந்தியாவினால் உருவாக்கப்பட்டதேசிய இராணுவம்தமிழ்

... வே தமது பாதுகாப்பை முற்றுமுழுதாகவே இழந்தார்கள். தமது உயிருக்கும் உடமைக்கும் பாதுகாப்பு இல்லை என்பதனால் பெருமளவிலான தமிழர்கள் இடப்பெயர்ச்சிக்குள்ளானார்கள். சுமார் 16 வயதிற்கு மேற்பட்ட 22 வயதிற்குட்பட்ட 25,000 வாலிபர்கள் கொழும்பிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் வடக்கு - கிழக்கு மாகாணத்திலிருந்து இடம் பெயர்ந்து சென்று தஞ்சம் அடைந்தார்கள். கட்டாய இராணுவப் பயிற்கிக்கு ஆட்கள் சேர்க்கப்பட்டமையால் இவ்வாறு புகலிடம் கோரிய தமிழ் இளைஞர்களுக்கு பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியில் ஒரு பராமரிப்பு முகாம் திறக்கப்பட்டது. இந்தப்படை உண்மையில் தமிழ் மக்களைப் பாதுகாக்க அமைக்கப்பட்ட படையல்ல. மாறாக மாகாண அரசு தமிழ் மக்களிடமிருந்து தன்னைப் பாதுகாக்க உருவாக்கிய படை ஆகும்.

ஈ.பி.ஆர்.எல்,எவ் ஈ.என்.டி.எல்.எவ் மற்றும் ரெலோ ஆகிய மூன்று தேசத் துரோகக் கும்பல்களும் தம்மை அரசியல் ரீதியாகப் பலப்படுத்த தமிழர் தேசியசபை என்ற அமைப்பை உருவாக்கியது போல தம்மை இராணுவரீதியாகப் பாதுகாக்கவே இந்தத்தேசிய இராணுவத்தைஉருவாக்கினார்கள் இந்தப்படையை இலங்கை இராணுவ முகாம்களைத் தாக்குவதில் பயன்படுத்துவதன் மூலம் மக்கள் மத்தியில் பயப்பிராந்தியை உருவாக்கி அவர்களை இந்தியாவுக்கு அகதிகளாக ஓடவைப்பதன் மூலம் மேலும்சிக்கல்களைஉருவாக்கி இந்திய இராணுவத்தை இங்கு நிரந்தரமாகவே நிலைகொள்ள வைக்கும் ''றோ'' வின் திட்டத்திற்கும் இப்படையே உருவாக்கப்பட்டது. இந்தியா 1987க்கு முன்னர் தமிழ் ஈழத்தை ஆக்கிரமிப்புச் செய்ய எத்தகையதொரு அரசியல் சூழ்நிலையை உருவாக்கியதோ அதே போன்றதொரு அரசியல் சூழ்நிலையையே இன்று இந்தியாதான் தொடர்ந்து நிலை கொள்வதற்காக இங்கு உருவாக்க முனைந்து நின்றது. அதற்காக இக்கூலிப் படையை உருவாக்கியது.

### எதிர்கால விளைவுகள்:

இளைஞர்களையும் மாணவர்களையும் கட்டாயமாகப் பிடித்துச் சென்று இராணுவப்பயிற்சி வழங்குவதன்


5ஆம் பக்கம் பார்க்க

## ஜே. ஆர். பேட்டி

கேள்வி: இந்தியப் படைகள் எதற்காக இலங்கை வந்தன?

பதில்: 1987 ஜூலையில் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட ராஜீவ் இலங்கையில் தங்கியிருந்த சமயம் இங்கு வன்செயல்கள் தொடங்கின. வன்செயல்களை தடுப்பதற்குப் போதுமான பொலிஸ் படையினர் கொழும்பில் இருக்கவில்லை. இதற்கான காரணத்தை நான் ஐ. ஜி. பி. யிடம் கேட்டபோது, 2400 பொலிஸார் எசலப் பெரஹரா பாதுகாப்பிற்காகக் கண்டி சென்றுள்ளதாகவும், பெரஹராவை நிறுத்தினால் ஒழிய பொலிஸ் படையினரைத் தன்னால் திருப்பி அழைக்க முடியாத காரியம் என்று அவர் தெரிவித்தார். அதன்பின் நான் பாதுகாப்பும் படை உயர் அதிகாரிகளை நாடினேன். ''வடக்கிலும் கிழக்கிலுமுள்ள இராணுவத்தில் ஒரு பகுதியைத் தந்துதவ முடியும். ஆனால், அவர்களை கொணர்வதற்கு விமானங்கள் கிடையாது'' என்றார்கள். இந் நேரத்தில் தான் நான் படும் கஷ்டங்களை அறிந்த ராஜீவ் ''என்னால் உதவ முடியுமா?'' என்று கேட்டார்?

எனது கஷ்டங்களை நான் அவருக்கு விளக்கியதும், வட-கிழக்கில் உள்ள இராணுவத்தினரை அழைத்து வர விமானங்களை தந்துதவுவதாகத் தெரிவித்தார்.



எனக்கொரு செய்தி அனுப்பியிருந்தா.ர் அது வருறுமாறு:

ஆயுதங்களை ஒப்படைக்கவும், ஒப்பந்தத்தைச் சாதகமாகச் செயற்படுத்தவும் பிரபாகரன் சம்மதம் தெரிவித்துள்ளார். ஆயுதங்களை கையளிப்பதற்குத் தானே யாழ்ப்பாணம் வருவதாகவும் தெரிவிக்கிறார். ஆகஸ்ட் 2 ஆம் திகதி மாலைவேளை இதற்காகப் பிரபாகரன் விமானத்தில் யாழ்ப்பாணம் வரவிருக்கிறார். பிரபாகரன் நாக்குப் பிசகினால் அல்லது ஆயுதங்களை ஒப்படைக்க வழிவகை செய்யத் தவறும் பட்சத்தில், இந்திய இராணுவம் விடுதலைப் புலிகளை பலவந்தமாகக் கட்டாயப்படுத்தி நிராயுதபாணிகளாக்கும்.''

கேள்வி: வல்லமை பொருந்திய இந்திய இராணுவமா?

பதில்: ஆமாம்.

கேள்வி: விடுதலைப் புலிகள் இந்திய இராணுவத்தை மறுலலித்து ஆயுதங்களுடன் தம் வழியில் செல்லக்கூடும் என்பதை நீங்கள் அல்லது ராஜீவ் எப்போதாவது சிந்தித்ததுண்டா?

பதில்: இல்லை. நான் அந்த முறையில் சிந்திக்கவில்லை. ஒப்பந்தத்தை ஆதரித்துப் பிரச்சினை வந்ததும் அதை மீறியவர்களைப் பற்றி நீங்கள் பேசாமலிருக்கிறீர்கள்.

கேள்வி: ஆனால், இந்த

# சிங்களவர்களுக்காக இந்தியர்கள் சண்டையிட்டனர்

இணைக்கும்படியும், விரும்பினல் கிழக்கிலங்கையில் மக்களிடம் ஒப்பங் கேட்டு' கிழக்கு இவ்விணைப்பிலிருந்து விடுவித்துக் கொள்ளலாம் என்பது புதிய திட்டமாகும். ''ஆயுதங்களைக் கீழே வைத்துவிடு ஜனநாயக நீரோட்டத்தில் இணைந்து மாகாண சபைகளையும்' இந்திய இலங்கை ஒப்பந்தத்தையும் ஏற்றுக் கொள்ளும்படி நாம் போராளிக் குழுக்களை இசைய வைத்துள்ளோம்'' என்று ராஜீவ் மேலும் தெரிவித்தார். ராஜீவ்வின் யோசனையை மறுப்பதானால் வெற்றியைப் பற்றிய நம்பிக்கையில்லாமல் யுத்தம் தொடர்ந்து நடைபெறும் சமாதான ஒப்பந்தத்தை ஏற்க மறுத்தாலும் உலகம் எம்மைத் தூற்றும். நாம் வடக்கையும் கிழக்கையும் தற்காலிகமாக இணைக்கும் புதிய திட்டத்தையே எதிர்க்கிறோம்.

கூறியிருந்தேன். இராணுவ அதிகாரிகள் ஒத்துவரவில்லை

கேள்வி: விடுதலைப்புலிகள் தமது வாக்குறுதியை மீறியது எதற்காக?

பதில்: அவர்களில் சிலரை பாதுகாப்பு படையினர் பிடித்து விசாரணைகளுக்காகக் கொழும்புக்குக் கொண்டு வரவிருந்தனர். நஞ்சருந்தி அவர்கள் தமது உயிரை மாய்த்துக் கொண்டனர்.

கேள்வி: அவர்களை கொழும்புக்குக் கொண்டு செல்ல வேண்டும் என்று முடிவு செய்தது யார்?

பதில்: பாதுகாப்பு படையினர்.

கேள்வி: இதன் பிறகு அவர்கள் கட்டவிழ்த்து விடப்பட்டார்கள்?

> ''மேலும் (விமானத்தை) இழந்திருப்பின் விமானப்படையினர் பறக்க மறுப்புத் தெரிவித்திருப்பார்கள். விடுதலைப் புலிகளிடம் விமான எதிர்ப்புத் துப்பாக்கிகள் இருந்திருப்பின் எமது ஆகாய ஆதிக்கத்தை அவர்களிடம் இழந்திருப்போம்.''

கேள்வி: ராஜீவ் உங்களுக்குப் பயம் காட்டவில்லையா?

பதில்: பாண் போட்ட கதையைக் கருதுகிறீர்களாக்கும்?

கேள்வி: இல்லை நான் அதைச் சொல்லவில்லை டிக்ஸிற் ஊடாக உங்களைப் பயப்படுத்தியதைச் சொல்லுகிறேன்.

பதில்: ஆகாயத்திலிருந்து பாண் போட்டது தப்பான செயலாகும். ''நீங்கள் செய்த இச் செயலை மன்னிக்கலாம். ஆனால் என்னால் மறக்க முடியாது'' இவ்வாறு நான் அவருக்கு நேராகவும், பகிரங்கமாகவும் தெரிவித்துள்ளேன்.

பதில்: ஆம். வலுக்கட்டாயமாக அவர்களிடமிருந்து ஆயுதத்தைக் களைந்து நிராயுதபாணிகளாக்குவதென ராஜீவ் எனக்கு எழுத்து மூலமான வாக்குறுதி அளித்திருந்தார். அவர் தன் சொல்லை காப்பாற்ற வேண்டும். இதனால் இந்திய அமைதிகாக்கும் படை போர்ப் படையாக மாறியது. எமது ஒருமைப்பாட்டைப் பேணும் முயற்சியில் சுமார் 1500 சிப்பாய்களை இழந்தனர். இந்தியர்கள் எமக்காக சண்டையிட்டனர். பயங்கரவாதத்தை ஒழிக்கும் சண்டையில் ராஜீவ் எம்முடன் இணைந்து கொண்டார்.

> ''உங்களுடைய ஜனநாயகமும் நீங்களும். நீங்கள் வைத்ததுதான் சட்டம். விளையாட்டு வீரரும் நீங்கள், நடுவரும் நீங்கள் எவ்லாவற்றையும் நாம் எமது முறையில் பார்த்துக் கொள்வோம்.''

(டிக்ஸிற்றைப் பொறுத்தமட்டில் அவர் எப்போதாவது என்னை அச்சுறுத்தியது கிடையாது. ஆனால் ஸ்ரீலங்கா இராணுவம் யாழ்ப்பாணத்

அதற்காக அவருக்கு நாம் கடப்பாடு உடையவர்கள்.

கேள்வி; இவ்வகை உதவி கிடைத்தால் ஸ்ரீலங்கா இரா

தியாவிடம் அனுமதிபெறாமல் உதிரிப்பாகங்களைத் தர முடியாது என அமெரிக்கா மறுத்து விட்டது. இஸ்ரேல் மட்டுமே எமக்கு உதவியது. எழுபதுகளில் இஸ்ரேலுடன் தொடர்புகளைத் துண்டித்தது பிழையென அப்போதுநான் உணர்ந்தேன். பி.எல்.ஓ.வின் தூதரகம் இங்குண்டு. அப்படியாயின் இஸ்ரேலுடன் தொடர்பு வைத்திருப்பதில் தவறென்ன இருக்கிறது?

கேள்வி:- ஆனால், இந்தியாவுக்கு அவ்வளவு சந்தோஷம் இல்லையா?

இல்லாமலாக்க என்னால் முடியாத காரியம் என்றும், எப்படியாயினும் இந்திரா காந்தி விரும்பினால் அதைப் பார்வையிடலாம் என்றும் அவருக்குக் கூறினேன்.

கேள்வி: பாகிஸ்தானுடனான நிலை என்ன?

பதில்: எங்கள் படைகளுக்குப் பயிற்சி வழங்கி அவர்கள் உதவினார்கள். படைகளை ஏன் பாகிஸ்தானுக்கு பயிற்சி எடுக்க அனுப்பவேண்டும் என்று என்னிடம் இந்திரா காந்தி கேட்டார். 'நீங்

## வெறுமையாக வரும் விமானங்களில் படைகளை அனுப்புங்கள்

பதில்:- ஒரு சமயம் திருமதி காந்தியுடன் நியூடெல்கியில் சில விஷயங்கள் குறித்து உரையாடினேன் அப்போது இஸ்ரேலியரை இலங்கையில் இருந்து வெளியேற்றும்படி என்னிடம் செல்லும்படி, திருமதி மண்டாரநாயக்கா இந்திரா காந்தியிடம் பிரஸ்தாபித் திருந்ததாக இந்திராகாந்தி என்னிடம் தெரிவித்தார். ''அம்மணி நீங்கள் பம்பாயிலுள்ள இஸ்ரேலிய நலன் காக்கும் பிரிவை மூடினால், இலங்கையில் அதை நானும் செய்கிறேன். ஆனால் திருமதி பண்டாரநாயக்கா அப்கானிஸ்தானிலிருந்து ரஷ்யரை வெளியேற்றும்படி உங்களை கேட்டிருக்கலாமே?'' என்று பதிலளித்தேன்.

கேள்வி: இம்மாதிரியான குறிப்புனர் திருமதி காந்தியிடம் உங்கள் செல்வாக்கை அதிகரித்திருக்கலாம் 1977 தேர்தல்களின் போது 'மாடுகளும் கன்றுகளும்' என்ற உவமைக் கதையைச் சொல்லியிருக்கிறீகள்.

கள் பயங்கரவாதிகளுக்குப் பயிற்சி தருகிறீர்கள். பயங்கரவாதிகளுக்கும் எமது படையினருக்கும் உங்களால் பயிற்சி வழங்க முடியாது' என்றேன்.



கேள்வி: சீனர்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

பதில்: அவர்கள் நல்ல நண்பர்கள், எமக்கு இராணுவஉபகரணங்களையும், துப்பாக்கி

விியையும் கைப்பற்றியிருக்கலாம். தேர்தல் வைப்பதா, இல்லையா என்பதை மக்கள் தீர்மானிக்கவே நான் இவ்வழிமுறையைக் கையாண்டேன்.

கேள்வி: ஒப்பங் கேட்டல் நடந்த சமயம் நான் ஐலண்ட் பத்திரிகையின் ஆசிரியராக இருந்தேன். அப்போது நான் எழுதிய ஆசிரியத் தலையங்கத்தில், சட்டபடி சரியானவ எப்பொழுதும் ஒழிக்க நியமங்களுக்கு பொருந்துவதாக அமையாது என்றும், இதற்காகப் பின்னாளில் திரு. ஜெயவர்த்தனா கணக்குக் கொடுக்க வேண்டி வரும் என்றும் எழுதியிருந்தேன்.

பதில்: தேர்தலை திருமதி பண்டாரநாயக்கா பிற்போட்ட சமயம் அவருக்கு நீங்கள் இதைச் சொல்லியிருக்கலாமே.

கேள்வி: ஐலண்ட் பத்திரிகையை 1981ல்தான் நாம் ஆரம்பித்திருந்தோம்.

பதில்: ஆ! ஆம்

கேள்வி: ஒப்பம் கேட்டதின் தீர்ப்பு ஜே. வி. பி.யைப் பாதித்தது.

பதில்: பொலிஸ் அறிக்கைகளின்படி அவர்கள் ஒரு இரத்தப் புரட்சிக்குத் தம்மைத் தயார் பண்ணிக்கொண்டிருந்தார்கள்.

கேள்வி: தேர்தலில் வெற்றி பெறலாம் என்ற நோக்கத்துடன் றோகண விஜெயவீரா ஜனாதிபதித் தேர்தல் களத்தில் குதிக்கவில்லை இத்தேர்தலைப் பொதுத் தேர்தலுக்கான ஒரு மேடையாகப் பாவித்து பல ஆசனங்களைப் பெறலாம் என்பது அவரது எண்ணக்கருவாகும்.

பதில்: ஒப்பங் கேட்டலை நான் நடாத்தத் தீர்மானித்த சமயம் ஜே. வி. பியைப் பற்றி நான் கருத்திற் கொள்ளவில்லை. என்பது உண்மை.


கேள்வி: விடுதலைப்புலிகள் பற்றி உங்கள் கருத்து என்ன? 1983 ஜூலை 23ல் 13 ராணுவத்தினரை அவர்கள்கொன்ற பிறகுதான் அனர்த்தங்கள் ஆரம்பமாகியன. ஒப்பங்கேட்

## 1982-இல் தேர்தல் நடந்திருப்பின் நாம் தோற்கடிக்கப்பட்டிருக்கலாம்

பதில்: உவமைக் கதையைக் கூறியது நியாமற்றது தான். தேர்தலின் போது

முதலியவற்றையும் நியாயமான விலையில் தந்தார்கள். ஆனால், அவர்களால் என்ன

டல் இல்லாவிட்டால் இத்திகதியில்தான் உங்களது அரசாங்கத்தின் பதவிக் காலமும்



கிறேன்.

**பதில்:** ஆகாயத்திலிருந்து பாண் போட்டது தப்பான செயலாகும். ''நீங்கள் செய்த இச் செயலை மன்னிக்கலாம். ஆனால் என்னால் மறக்க முடியாது'' இவ்வாறு நான் அவருக்கு நேராகவும், பகிரங்கமாகவும் தெரிவித்துள்ளேன்.

போர்ப் படையாக மாறியது. எமது ஒருமைப்பாட்டைப் பேணும் முயற்சியில் சுமார் 1500 சிப்பாய்களை இழந்தனர். இந்தியர்கள் எமக்காக சண்டையிட்டனர். பயங்கர வாதத்தை ஒழிக்கும் சண்டையில் ராஜீவ் எம்முடன் இணைந்து கொண்டார்.

திருமதி பண்டாரநாயக்கா அப்கானிஸ்தானிலிருந்து ரஷ்யரை வெளியேற்றும்படி உங்களை கேட்டிருக்கலாமே?'' என்று பதிலளித்தேன்.

**கேள்வி:** இம்மாதிரியான குறிப்புனர் திருமதி காந்திபிடம் உங்கள் செல்வாக்கை அதிகரித்திருக்கலாம் 1977 தேர்தல்களின் போது 'மாடுகளும் கன்றுகளும்' என்ற உவமைக் கதையைச் சொல்லியிருக்கிறீகள்.



**கேள்வி:** சீனர்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

**பதில்:** அவர்கள் நல்ல நண்பர்கள், எமக்கு இராணுவஉபகரணங்களையும், துப்பாக்கி

பெறலாம் என்பது அவரது எண்ணக்கருவாகும்.

**பதில்:** ஒப்பங் கேட்டலை நான் நடாத்தத் தீர்மானித்த சமயம் ஜே. வி. பியைப் பற்றி நான் கருத்திற் கொள்ளவில்லை. என்பது உண்மை.

**கேள்வி:** விடுதலைப்புலிகள் பற்றி உங்கள் கருத்து என்ன? 1983 ஜூலை 23ல் 13 ராணுவத்தினரை அவர்கள்கொன்ற பிறகுதான் அனர்த்தங்கள் ஆரம்பமாகியன. ஒப்பங்கேட்

**''உங்களுடைய ஜனநாயகமும் நீங்களும். நீங்கள் வைத்ததுதான் சட்டம். விளையாட்டு வீரரும் நீங்கள், நடுவரும் நீங்கள் எவ்லாவற்றையும் நாம் எமது முறையில் பார்த்துக் கொள்வோம்.''**

''படைகள் வடக்கிலும், கிழக்கிலுமிருந்து விலகி மீளத் தென் இலங்கைக்கு வந்தால் அங்கு உதவி புரிவதற்கு ஆள் உதவி தேவைப்படுமா?'' என்று ராஜீவ் என்னிடம் கேட்டார். ஒப்பந்தப்படி இது சாத்தியமானது. விமானங்கள் வெறுமையாக வருவதால், சிலரை அனுப்பித் தாருங்கள் என்றேன். இப்படியாகத்தான் இலங்கைக்கு இந்திய இராணுவத்தினர் வந்து சேர்ந்தார்கள்!

**கேள்வி:** இந்தியப் படை திரும்பிப் போகும் என்று நீங்கள் கருதுகிறீர்களா?

**பதில்:** இவ்விஷயத்தில் சந்தேகப்படுவதற்கு ஒன்றுமில்லை. அவர்கள் போக வேண்டியவர்கள்தான். ஸ்ரீ லங்காவில் முப்படைகளின் தளபதியான ஜனாதிபதியின் கீழ்த்தான் இந்திய இராணுவம் செயற்படுகிறது.

**கேள்வி:** முக்கியமான தமிழர் குழுக்களைக் கருத்திற் கொள்ளாமற்தானே இந்திய-இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்தாகியது? இது இவ்வாறிருக்க, நிலையான சமாதானத்தை நாம் எதிர்பார்க்கலாமா?

**பதில்:** இக் கருத்துத் தவறானதாகும். ராஜீவ் இயக்கங்களுடன் தொடர்பு கொண்டபோது, இயக்கங்கள் ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்டன. ஆனால் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பு ஒன்றுதான் ஒப்பந்தத்தை ஏற்று, பிறகு அதை முறியடித்தது. 1987 ஆகஸ்ட் 1 ஆம் திகதி ராஜீவ்

**கேள்வி:** ஆனால், இந்த ஒப்பந்தம் ஒற்றுமையை ஏற்படுத்தியதுதானே - இல்லையா?

**பதில்:** ஒப்பந்தம் ஒரு சமாதான ஏற்பாடாகும். 2 1/2 மாதங்களுக்குச் சமாதானம் நிலவியது. சிங்களவர் யாழ்ப்பாணம் போனார்கள். சிங்களவர் நடாத்தும் பாண் பேக்கரிகள் மீண்டும் தொழிற்பட்டன. மக்கள் நயினாதீவுக்குப் போனார்கள். இது சமாதானத்துக்கான ஒப்பந்தம்; போருக்கு இடமில்லை.

ராஜீவ் ஒப்பந்தத்தைப் பற்றிய யோசனையை முன் வைத்த சமயம் நாம் 1976 முதல் வடக்கிலும் 1983 - லிருந்து தெற்கிலும் பயங்கரவாதிகளுக்கு எதிராகப்போராடிக் கொண்டிருந்தோம். இந்தியா, அதுவும் குறிப்பாக தமிழ் நாடு ஒழிவு மறைவின்றி வட பகுதிப் பயங்கரவாதிகளுக்கு உதவிக் கொண்டிருந்தது. இவர்கள் எமக்கு முட்டுக்கட்டைகளை ஏற்படுத்தி, சர்வதேச அரங்கில் எம்மைக் கொச்சைப் படுத்தியும், எமது ஆயுதப் படைகளைத் தாக்கிய வண்ணமிருந்தனர். சடுதியாக மே / ஜூன 1987 -ல் ''பாராளுமன்றத்தில் 1986 டிசம்பரில் நீங்கள் முன்வைத்துச் செயற்படுத்துவதாக நம்பிக்கை தெரிவித்த யோசனைகளை செயற்படுத்தவும், அதாவது மாகாண சபைகளும் அதிகாரப் பரவலாக்கமும்'' - இவ்வாறு ராஜீவ் தெரிவித்திருந்தார். இத்துடன் ஒரு புதிய திட்டத்தையும் ராஜீவ் சேர்த்திருந்தார், வடக்கையும் கிழக்கையும் தற்காலிகமாக

(டிக்ஸிற்றைப் பொறுத்த மட்டில் அவர் எப்போதாவது என்னை அக்சுறுத்தியது கிடையாது. ஆனால் ஸ்ரீலங்கா இராணுவம் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்ற இந்தியாவிடம் போவதில்லை என்று அவர் லலித் அத்துலத் முதலிக்குக் கூறியதுண்டு.

**கேள்வி:** இது எப்படி முடியும்? இந்தியத் துருப்புக்கள் வடக்கில் பயங்கரவாதிகளுக்கு உதவுதல் மூலமாகவா?

**பதில்:** அப்படியுமிருக்கலாம் அல்லது விடுதலைப்புலிகளுக்கு விமான எதிர்ப்பு ஆயுதங்களை வழங்குவதன் மூலம் சாதிக்கலாம். வடமராட்சிச் சண்டையில் ஒரு விமானத்தை இழந்து விட்டதாக பாதுகாப்பு அதிகாரிகள் மந்திரி சபைக் கூட்டத்தின் போது எனக்கு அறியத் தந்தனர். மேலும் ஒன்றை இழந்திருந்தால் விமானப் படையினர் பறக்க மறுப்புத் தெரிவித்திருப்பார்கள். விடுதலைப் புலிகளிடம் விமான எதிர்ப்புத் துப்பாக்கிகள் இருந்திருப்பின் எமது ஆகாய ஆதிக்கத்தை அவர்களிடம் இழந்திருப்போம்.

**கேள்வி:** ஸ்ரீ லங்கா ராணுவத்தினர் 1987 ல் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றத் தயாராக இருந்தார்களா? அல்லது அவர்களை நீங்கள் தடுத்தீர்களாக்கும்?

**பதில்:** பெப்ரவரியில் வடமராட்சி நடவடிக்கைகளுக்கு முன்னதாகவே யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றும்படி நான் யோசனை கூறியிருந்தேன். மறுபடி மே மாதத்தில் இடம் பெற்ற ராணுவ நடவடிக்கைகளுக்கு முன் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றும்படியும்

அதற்காக அவருக்கு நாம் கடப்பாடு உடையவர்கள்.

**கேள்வி;** இவ்வகை உதவி கிடைத்தால் ஸ்ரீ லங்கா இராணுவத்தை தெற்கில் ஜே. வி, பிக்கு எதிராகப் பயன் படுத்த முடிந்தது?

**பதில்:** 1971-இல் ஜே. வி. பிக்கு எதிராகச் சண்டையிட திருமதி. பண்டாரநாயக்கா, உதவியை நாடியது போல் நான் நாடவில்லை. அப்போது வடக்கிலும் கிழக்கிலும் சண்டையும் நிகழவில்லை.

திருமதி பண்டாரநாயக்கா எல்லோரிடமும் உதவியை நாடினார். ஜே. வி. பியுடன் என்னால் மோத முடியும். ஆனால் வடக்கிலும், கிழக்கிலும் உள்ள கிளர்ச்சிக்காரர்ருக்கு எதிராக இந்தியா எமக்குக் கை கொடுத்தது. பயங்கரவாதிகளுக்கு நிதி உதவியும் படைக்கலப் பயிற்சியும் இந்தியாதான் வழங்கியது.

நான் உதவியை நாடினேன். உதவி வந்து கொண்டிருந்தன. ஆனால் இந்தியா எல்லாவற்றிற்கும் தடையாக இருந்தது.

**கேள்வி:-** நீங்கள் உதவியைக் கோரிய சமயம் மேற்கு நாடுகளிலிருந்து உங்களுக்கு ஏன் உதவி கிட்டவில்லை?

**பதில்:-** இந்தியாவைச் சினக்க மற்றவர்கள் விரும்பவில்லை ''இந்தியா என்ன நினைக்கும்'' என்றபதில்தான் எனக்குக் கிடைத்தது. நீங்கள் உதவுவதுபயங்கரவாதத்துக்கு எதிராக என்பது எனது பதில் ஆனல் அவர்கள் இம்மியளவும் அசையமாட்டார்கள் அமெரிக்காவிடமிருந்து கொள்முதல் செய்த பெல் ஹெலிகப்டருக்கு உதிரிப்பாகங்கள் தேவைப்பட்டபோது, இந்

# 1982-இல் தேர்தல் நடந்திருப்பின் நாம் தோற்கடிக்கப்பட்டிருக்கலாம்

**பதில்:** உவமைக் கதையைக் கூறியது நியாமற்றது தான். தேர்தலின் போது அக் கதையைச் சொன்னது நான்தான். ஆனால், அதற்காக இந்திரா காந்தி என் மேல் ஆத்திரம் கொள்ளவில்லை.

**கேள்வி:-** எண்பதுகளின் முன்பகுதியில் நட்புறவு ஒப்பந்த நகல் ஒன்றை நீங்கள் இந்திராவுக்கு அனுப்பியது உண்மையா?

**பதில்:-** உண்மைதான். 1984-ல் நான் அதை அனுப்பியிருந்தேன். ஆனால், இந்திய நிர்வாகத்தினால் தடங்கல்கள் ஏற்பட்டது. ஒப்பந்தமானது இந்திய - சோவியத் நட்புறவு ஒப்பந்தம் போலானது. அதைக் கவனத்தில் எடுத்துக் கொள்வதாக இந்திரா காந்தி கூறுனார்.

**கேள்வி:-** இந்தியாவை இலங்கை மீது ஆத்திரமடையச் செய்தற்கான காரணிகள் எவை?

**பதில்:-** இதில் நான்கு விஷயங்கள் அடங்கும். ஒன்று திருகோணமலையில் உள்ள எண்ணெய்க் கொள்கலன்களை அமெரிக்க - சிங்கப்பூர் பாகிஸ்தான் நிறுவனத்துக்கு வழங்கியது. இரண்டாவது வாயிஸ் ஒப் அமெரிக்கா ஒலி அனுப்புக் கருவி தொடர்பானது. மற்றவை இஸ்ரேலியர் இலங்கையில் இருந்தமையும், எமது படையினருக்கு பாக்கிஸ்தானில் பயிற்சி வழங்கியதுமாகும்.

**கேள்வி:** வாயிஸ் ஒப் அமெரிகாவின் நிலை?

**பதில்:** நான் பதவிக்கு வரும் முன்னரே வாயிஸ் ஒவ் அமெரிக்கா இங்கிருந்தால் அதை முதலியவற்றையும் நியாயமான விலையில் தந்தார்கள். ஆனால், அவர்களால் என்ன செய்ய முடியும்? இந்தியர்களை வேலை கொடுப்பதற்காக வடக்கில் ஓர் எல்லைச் சண்டையை ஆரம்பிக்குமாறு நான் சீனாவைக் கேட்க முடியாது. நான் கேட்டாலும் கூட, அவர்கள் எல்லைச் சண்டையைத் தொடங்குவார்களா? என்பது சந்தேகம்தான்

**கேள்வி:** 1982ஆம் ஆண்டை நாம் திரும்பிப் பார்க்கும் போது மக்களிடம் ஒப்பம் கேட்டது மாபெரும் தவறாகும்.

**பதில்:** அப்படி ஏன் நீங்கள் கருதவேண்டும்? ஒப்பங் கேட்டது தவறா அல்லது ஒப்பங் கேட்டபோது மக்கள் வாக்குகளால் தமது கருத்தை வெளியிட்டது தவறா? மக்கள் ஒரு முடிவை எடுத்தார்கள். பாராளுமன்றத்தின் கால எல்லையை நீடிப்பதற்குச் சாதகமாக 52% மக்கள் வாக்களித்தனர். இது நல்லதொரு ஜனநாயக முறையாகும். யார்தான் இதை எதிர்க்க முடியும்? இப்படியான வழிமுறையைத்தான் எல்லா ஜனநாயக நாடுகளும் செயற்படுத்துகின்றன. முன்பெல்லாம் 1975இல் திருமதி பண்டாரநாயக்கா தேர்தலை பின்போடுவதற்கு பாராளுமன்ற உறுப்பினரின் சம்மதத்தைப் பெற்றுக்கொண்டார்.

**கேள்வி:** மக்களிடம் ஒப்பம் கேட்ட நீங்கள் ஒரு பொதுத் தேர்தலுக்கு முகம் கொடுத்திருக்கலாமே?

**பதில்:** அதை எம்மால் செய்திருக்க முடியும். விகிதாச்சார பிரதிநிதித்துவ வாக்களிப்பில் அவர்கள் பத

டல் இல்லாவிட்டால் இத்திகதியில்தான் உங்களது அரசாங்கத்தின் பதவிக் காலமும் முடிவடைந்திருக்க வேண்டும்

**பதில்:** இதிலிருந்து எதை நான் அனுமானிப்பது?

**கேள்வி:** '' உங்களுடைய ஜனநாயகமும் நீங்களும், நீங்கள் வைத்ததுதான் சட்டம் விளையாட்டு வீரரும் நீங்கள் நடுவரும் நீங்கள்தான். எல்லாவற்றையும் நாம் எமது முறையில் பார்த்துக் கொள்வோம்'' என்று தமிழ் இளைஞர் கூறுகிறார்கள்.

**பதில்:** ஒப்பம் கேட்டல் நடந்தேறிய போது நாம் தமிழ் இளைஞரைப்பற்றியும் யோசிக்கவில்லை.

**கேள்வி:** இதை நீங்கள் ஒரு பிழை என்று எண்ணவில்லையா?

**பதில்:** இல்லை. இது ஒரு ஜனநாயக முறை அப்படியாயின் மக்கள் வழங்கிய தீர்ப்பில் பிழை உள்ளதே ஒழிய ஒப்பங்கேட்டலில் அல்ல. இதனால் நக்சலைட்ஸ் பதவிக்கு வருவதை என்னால் தவிர்க்க முடிந்தது.

**கேள்வி:** இதனால் வேறு பல அரக்கர்கள் உருவாகியுள்ளனர்.

**பதில்:** விஜய குமாரணத்துங்க மனம் மாறியிருந்தார். கொலை செய்யப்படுவதற்கு ஒரு வாரம் முன்னதாக அவர் என் வீட்டுக்கு வந்திருந்தார்.

**கேள்வி:** ஒப்பந்தத்தைத் திரும்பிப் பார்க்கலாம். கடற்படை வீரன் ராஜீவ் காந்தியைத் தாக்கியபோது, அவர் கொலையுண்டிருந்தால் என்ன நிகழ்ந்திருக்கும்?

(5ஆம் பக்கம் பார்க்க)

சிந்தனைக்கு

வீரசுதந்திரம் வேண்டி நின்றார்
- பின்னர்
வேறொன்றுகொள்வாரோ!
- பாரதியார்

ஈழநாதம்

31, வைமன்வீதி, யாழ்ப்பாணம். 19 - 02 - 90

## வந்தது எடுக்கவா? கொடுக்கவா?

இலங்கை நடந்துகொள்ளும் விதத்தைப் பொறுத்தே எதிர்காலத்தில் இலங்கை இந்திய உறவுகள் அமையும் என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் ஐ. கே. குஜ்ரால் ஒரு பேட்டியில் தெரிவித்திருக்கிறார்.

இலங்கையிலிருந்து கடைசி இந்திய ஜவான் வெளியேறும் வரை உத்தேச இலங்கை - இந்திய நட்புறவு ஒப்பந்தத்தில் இலங்கை கைச்சாத்திட முடியாது என்று இலங்கையின் பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா கூறியிருந்ததற்குப் பதிலளிக்கு முகமாகவே திரு. குஜ்ரால் இலங்கை - இந்திய உறவு பற்றித் தெரிவித்திருக்கிறார்.

ராஜீவ் காந்தி தலைமையிலிருந்த காங்கிரஸ் ஆட்சி தேர்தலில் தோல்வி அடைந்து வி. பி. சிங் தலைமையிலான தேசிய முன்னணி ஆட்சிபீடமேறியதும் இந்தியாவைச் சூழ்ந்துள்ள அயல் நாடுகள் நிம்மதியடைந்தன.

ராஜீவ்காந்தியின் நடவடிக்கைகளால் அயல்நாடுகளுடன் உறவு சீர்குலைந்து போயிருந்ததை எடுத்துக்காட்டிய பிரதமர் வி. பி. சிங் அயல்நாடுகளுடனான உறவுகளை மேம்படுத்தப் போவதாக அறிவித்தார்.

டில்லியில் புதிய ஆட்சி வந்ததும் முதன் முதலில் அங்கு சென்ற வெளிநாட்டு அமைச்சர் இலங்கையின் பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினாதான்.

அச்சமயத்தில் டில்லி ஆட்சி பீடத்தில் மாற்றம் ஏற்பட்டிருந்தாலும் அதிகார பீடத்தில் மாற்றம் ஏற்பட்டிருக்கவில்லை. இன்றும்கூட இந்திய வெளி விவகார அமைச்சர் ஐ. கே. குஜ்ராலின் பேச்சுக்கள் டில்லி அதிகார பீடத்தில் சரியான மாற்றம் ஏற்படவில்லை என்பதை எடுத்துக் காட்டுகிறது.

அமைதிப்படை என்ற பெயரில் ஈழத்துக்கு அனுப்பப்பட்ட இந்திய இராணுவம் இலங்கை அரசின் வற்புறுத்தல் காரணமாக திருப்பி அழைக்கப்பட்டு வருகிறது. ஆனாலும் இப்படையை முற்றாக அழைத்துக்கொள்ள "றோ" என்ற இந்திய உளவுப் பிரிவின் பகுப்பாய்வுப் பகுதியும் டில்லி அதிகார வர்க்கமும் விரும்பவில்லையென்பது தெளிவாகத் தெரிகிறது.

போராளிகளிடமிருந்து ஆயுதங்களைக் களைவதற்கு வந்த இந்திய இராணுவம் தப்பி ஓடியவர்களுக்கு ஆயுதங்களைக் கொடுத்துப் பாதுகாப்பும் அளித்துக் கூட்டி வந்தது.

இயக்கங்களை புதிதாக உருவாக்கி மோதல்களை ஏற்படுத்தி நாட்டைக் குழப்பிய இந்திய இராணுவம் பெரு

# நேபாள அரசுக்கெதிராக எதிர்க்கட்சிகள் போராட்டம்;

## ஆயிரக்கணக்கானோர் கைது; தலைவர்கள் வீட்டுக்காவலில்!

(காட்மண்டு - 18)

நேபாளத்தில் அரசிற்கெதிராக போராட்டம் நடாத்தவிருந்த ஆயிரக்கணக்கானோர் கைது செய்யப்பட்டுள்ளதோடு, எதிர்க்கட்சித் தலைவர்கள் யாவரும் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

நேபாள காங்கிரஸ் கட்சி ஜனநாயக உரிமைகள் கோரியும், பல கட்சி ஆட்சி முறை கோரியும் இன்று ஆர்ப்பாட்டம் ஒன்று நடாத்தத் திட்டமிட்டிருந்தனர். அதற்கு நேபாளியக் காங்கிரஸ் கட்சிக்கு ஐக்கிய இடதுசாரி முன்னணியும் சோவியத் சார்பு கம்மியூனிஸ்ட் கட்சியும் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

இவ் ஆர்ப்பாட்டத்தைக் கட்டுப் படுத்துவதற்காக நேபாளிய அரசாங்கம் நேபாளிய காங்கிரஸ்கட்சித் தொண்டர்களை பெருமளவில் கைது செய்துள்ளது. நேபாளிய காங்கிரஸ் கட்சித் தலைவர்களின் தகவல்களின்படி 1500 பேருக்குமேல் கைது செய்யப்பட்டுள்ளதாக கூறினர். ஆனால் கைதுகள் இடம் பெற்றதை ஒப்புக் கொண்டுள்ள நேபாளிய அரசாங்கம் 539 பேர் மட்டுமே கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளது.

கடைசியாகக் கிடைத்த செய்திகளின்படி நேபாளின காங்கிரஸ் கட்சித் தலைவர் கிருஸ்ணா பிரசாத் அவர்களும், ஏனைய எதிர் கட்சித் தலைவர்களும் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ளதாக கடைசியாகக்கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

மேலும் தேசிய ஜனநாயக நாளான இன்று அரசு ஆதரவாளர்கள் எதிரக்கட்சி ஆதரவாளர்கள் ஆகிய இருபாலாரதும் நாடு முழுவதும் பேரணிகள் ஆர்ப்பாட்டங்கள் நடைபெறுவதாகவும் மேலும் பலர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## காஷ்மீரில் துப்பாக்கிச்சூடு; குண்டுவெடிப்பு; மூவர் பலி

(ஸ்ரீநகர் பெப். 81)

சனிக்கிழமை காஷ்மீர் பள்ளத்தாக்கில் மூன்று இந்திய எதிர்ப்பு ஆர்ப்பாட்ட சம்பவங்கள் நடைபெற்றன. இதனைக் கலைப்பதற்கு பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் மூன்று பேர் கொல்லப்பட்டதாகவும். பதினாறு பேர் காயமடைந்ததாகவும். செய்திகள் தெரிவித்தன. இவ் ஆர்ப்பாட்டங்கள், கடந்த புதன்கிழமை பரா மிலிட்டரி பொலிசார் நடத்திய துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தின் போது ஐந்து பேர் கொல்லப்பட்டதைத் தொடர்ந்தே இடம் பெற்றது.

வெள்ளிக் கிழமையில் இருந்து இதுவரை ஐந்து குண்டு வெடிப்புச் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன. இதன் தொடர்ச்சியாக அங்கு கடைகளும் வங்கிகளும் அரச நிறுவனங்கள் சிலவும் மூடப்பட்டுள்ளதாகவும் அங்கிந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

### ஆளுனரை நீக்கக் கோரிக்கை

காஷ்மீர் ஆளுநராக கடமையாற்றும் ஜக் மோகனை நீக்கும் படி தேசிய மகாநாட்டு கட்சியின் முன்னாள் நான்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதியைக் கேட்டுள்ளர்கள். இவர்கள்இவ்விடயத்தை நேரடியாக கவனிக்க வேண்டும் எனவும் கோரியுள்ளனர். இதேவேளை காஷ்மீர் ஆளுநர் மக்களுக்கு எதிராக போர் ஒன்றை தொடங்கியிருக்கிறார் என மாநில இந்திரா காங்கிரஸ் தலைவர் குற்றஞ் சாட்டியுள்ளார்.

## பாகிஸ்தானுக்கு சையித் எச்சரிக்கை.

பாகிஸ்தான் காஸ்மீர் எல்லைப் பகுதியில் எந்தவிதமான தவறான நடவடிக்கையிலும் ஈடுபடவேண்டாம் என இந்திய உள்த்துறை அமைச்சர் முத்தி முகமத் சையித் பாகிஸ்தானை எச்சரித்துள்ளார். இதனைப் பொருட்படுத்தாது பாகிஸ்தான் தவறாக நடக்குமேயானால் அதற்காக வருத்தப்பட வேண்டியிருக்கும் எனவும் தெரிவித்துள்ளார்.

## மணிப்பூர் மாநிலத்தில் ஆட்சிக்கு வருவது யார்? ஒத்தி வைக்கப்பட்ட தொகுதிகளின் முடிவுகளின் பின்னரே முடிவு

(கம்பாலா, பெப். 18)

மணிப்பூரில் சட்டசபைச்கு நடைபெற்ற தேர்தலில் இந்திரா காங்கிரஸ் கட்சியினருக்கும், எதிரணியினருக்கும் சமமான ஆசனங்கள் கிடைக்கப்

இருபகுதியினரும் தம்மை சட்டசபையை அமைப்பதற்கு அழைக்கும்படி ஆளுஞரைக் கோரியுள்ளனர்.

அதே வேளை மத்திய

## அமெரிக்காவின்,....

3ஆம் பக்கத் தொடர்ச்சி

விளைவாக இளைஞர்களும் மாணவர்களும் இவற்றிலிருந்து தப்புவதற்காக தமது

## ஊர்சுற்றி

### எழுதுவது

**அன்பர்கள் அணைவருக்கும் வணக்கம்!**

சில வருடங்களுக்குப் பின்னர் உங்களைச் சந்திப்பதில் மகிழ்ச்சி. அன்பர்கள் நண்பர்கள் பலரைக் கடந்த இரண்டரை வருடங்களுக்குள் இழந்துவிட்டேன்.

உங்களில் பலருக்கும் இதே அனுபவம் ஏற்பட்டிருக்கும். உங்கள் துயரங்களை மற்றவர்கள்களுடன் பகிர்ந்துகொள்வதன்மூலம் மனச் சுமையைக் குறைத்துக் கொள்ளலாமல்லவா?

1987-ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் பத்தாம் திகதிக்குப் பின்னர் இன்று வரை அமைதிப்படை என்ற இந்திய இராணுவத்தினால் உங்களுக்கு ஏற்பட்ட மிகமோசமான அனுபவத்தைத் தாளின் ஒரு பக்கத்தில் மிகச் சுருக்கமாக எழுதி ஆசிரியர், 'ஈழநாதம்' 31, வைமன் வீதி, யாழ்ப்பாணம், என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள். பிரசுரத்துக்கு ஏற்றவையை 'ஈழநாதம்'வெளியிடும்.

★ ★

87-ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் பத்தாம் திகதி அதிகாலை பத்திரிகைச் சுதந்திரம் பற்றிப் பெரிதாகப்பேசிக்கொள்ளும் இந்தியாவின் இராணுவம் 'ஈழமுரசு' பத்திரிகையின் அச்சுயந்திரத்தையும் அச்சகப் பகுதியையும் குண்டுவைத்துத் தகர்த்துவிட்டு முதல் நாள் இரவு கடமையாற்றிவிட்டு நித்திரை செய்துகொண்டிருந்த ஊழியர்களையும் கைது செய்து கூட்டிச் சென்றது உங்களுக்கெல்லாம் தெரியும்.

இதன் பின்னரும் கூட நவம்பர் பத்தாம் திகதி வரை 'ஈழமுரசு' பத்திரிகை வெளிவந்து கொண்டிருந்தது. யாழ். நகரிலிருந்தும் பின்னர் தொல்புரம், சங்கானை ஆகிய இடங்களிலிருந்தும் 'ஈழமுரசு' துணிச்சலுடன் செய்திகளைவெளியிட்டு வரலாற்று முக்கியத்துவம் பெற்றது.

★ ★

இந்த இரண்டேகால் வருட காலத்திலும்கூட நான் ஊர் சுற்றிக் கொண்டுதான் திரிந்தேன். இரண்டு மாதங்கள் மட்டும் இந்திய இராணுவத்தின் காவலில் கைதியாக இருந்தேன். இந்திய வானொலி புளுகும் இந்திய இராணுவத்தின் "தர்மம், ஒழுங்கு கட்டுப்பாடு" பற்றியெல்லாம் அனுபவித்து அறிந்து சொள்ளும் வாய்ப்புப் பெற்றேன்.

★ ★

யாழ்ப்பாணத்திலிருந்து நான்கு தமிழ்த்தினசரிகள் வெளிவந்துகொண்டிருந்தன. ஜே. ஆர். - ராஜீவ் ஒப்பந்தம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து இங்கு வந்த இந்திய இராணுவம் ஈழமுரசு, முரசொலி என்ற இரண்டு பத்திரிகை அலுவலகங்களுக்குள் அதிகாலையில் நுழைந்து அச்சு யந்திரங்களைக் குண்டு வைத்துத் தகர்த்து பத்திரிகைகளை வெளிவராமல் தடுக்க முனைந்தனர். காலவரையற்ற ஊரடங்கு, மின்சாரம் துண்டிப்பு, மக்கள் அனைவரையும் கோயில்களில் தங்க வைத்தமை போன்ற செயல்களினால் நான்கு பத்திரிகைகளில் ஒன்றுகூட ஒழுங்காக வெளிவரமுடியாமல் செய்யப்பட்டது.

அவசரகால நிலையில் பத்திரிகைகளுக்குத் தணிக்கை விதிக்கப்படுவதும் சில கட்சிப் பத்திரிகைகளைத் தடை செய்து 'சீல்' வைப்பதும் இலங்கை மக்கள் அறிந்த விஷயம். ஆனால் ஜனநாயகத்தின் காவலன் என்று தன்னைச் சொல்லிக்கொள்ளும் டில்லி ஏகாதிபத்தியம் ஈழத்தில் அச்சு யந்திரங்களுக் குண்டு வைத்துத் தகர்த்துப் பத்திரிகைகள் வெளிவராமல் தடுத்தது வரலாற்றில் மறக்க முடியாத சம்பதி.

இந்தியப்படைகள் திரும்பிக் கொண்டிருக்கின்றன. யாழ்ப்பாணத்திலிருந்து மீண்டும் நான்கு தமிழ்த் தினசரிகள் வெளிவரத் தொடங்கியிருக்கின்றன.

## சிங்களவர்களுக்காக...

(4 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பதில்: என்ன நடந்திருக்

ராய பேதத்தினால் காமினி ஜெயசூரியா எம்மை விட்டு விலகினார் பலருக்கு ஒப்பந்தம் தொடர்பாகப் பல கருத்துக்கள் நிலவின. ஒப்பந்தத்

அங்கு சென்ற வெளிநாட்டு அமைச்சர் இலங்கையின் பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினாதான்.

அச்சமயத்தில் டில்லி ஆட்சி பீடத்தில் மாற்றம் ஏற்பட்டிருந்தாலும் அதிகார பீடத்தில் மாற்றம் ஏற்பட்டிருக்கவில்லை. இன்றும்கூட இந்திய வெளி விவகார அமைச்சர் ஐ. கே. குஜ்ராலின் பேச்சுக்கள் டில்லி அதிகார பீடத்தில் சரியான மாற்றம் ஏற்படவில்லை என்பதை எடுத்துக் காட்டுகிறது.

அமைதிப்படை என்ற பெயரில் ஈழத்துக்கு அனுப்பப்பட்ட இந்திய இராணுவம் இலங்கை அரசின் வற்புறுத்தல் காரணமாக திருப்பி அழைக்கப்பட்டு வருகிறது. ஆனாலும் இப்படையை முற்றாக அழைத்துக்கொள்ள ''றோ'' என்ற இந்திய உளவுப் பிரிவின் பகுப்பாய்வுப் பகுதியும் டில்லி அதிகார வர்க்கமும் விரும்பவில்லையென்பது தெளிவாகத் தெரிகிறது.

போராளிகளிடமிருந்து ஆயுதங்களைக் களைவதற்கு வந்த இந்திய இராணுவம் தப்பி ஓடியவர்களுக்கு ஆயுதங்களைக் கொடுத்துப் பாதுகாப்பும் அளித்துக் கூட்டி வந்தது.

இயக்கங்களை புதிதாக உருவாக்கி மோதல்களை ஏற்படுத்தி நாட்டைக் குழப்பிய இந்திய இராணுவம் பெருமளவில் உயிரிழப்பையும் ஆயுதங்களின் இழப்பையும் தேடிக்கொண்டது.

இந்திய இராணுவம் தம்முடன் கூட்டிக் கொண்டு வந்தவர்களைக் காப்பாற்ற முடியாமல் போய்விட்டது. அவர்கள் மீண்டும் ஓடித்தப்பிக் கொண்டு இருக்கிறார்கள்.

ஆயுதங்களைக் களைவதற்கு வந்த இந்தியா பெருந்தொகையாக புதிய ஆயுதங்களைத் தமது பாதுகாப்புடன் கொண்டு வந்தவர்களுக்கு வழங்கியது.

இவற்றில் ஒரு தொகை விடுதலைப்புலிகளிடம் சேர்ந்து விட்டது. மற்றும் சில சில்லறைக் காசுகளுக்கு நாட்டில் விற்பனை செய்யப்பட்டிருக்கிறது. மற்றும் சில தமிழ்நாட்டில் இராமேஸ்வரம் கரையில் அ ப்பட்டிருக்கிறது. இன்னும் சில தமிழ்நாட்டுக்குள் சென்றிருக்கலாம்.

இந்த ஆயுதக் கடத்தல் ''றோ''வின் கைங்கரியமாக இருக்கலாம் என்று தமிழக முதலமைச்சர் மு. கருணாநிதியே தெரிவித்திருக்கிறார்.

இந்நிலையில் குழுமோதல்கள் என்றும், தமிழ்மக்களின் பாதுகாப்பு என்றும் டில்லி கூறுவது பிரச்சினையைத் திசை திருப்புவதற்கு உதவுமே தவிர இலங்கையில் அமைதி ஏற்பட உதவமாட்டாது.

இந்தியா தனது தவறுகளை மறுபரிசீலனை செய்து ஆத்ம சோதனை செய்வது எதிர்காலத்துக்கு நற் பயனைத்தரும். சின்னஞ்சிறிய தீவான இலங்கையைப் பயமுறுத்தும் தொனியில் இந்திய வெளிவிவகார அமைச்சர் கருத்துத் தெரிவித்திருப்பது நட்புறவை மேம்படுத்த எவ்வகையிலும் உதவிபுரியாது.

---

## சகல நிருபர்களுக்கும் ஓர்

# முக்கிய அறிவித்தல்

முன்னைய ''ஈழமுரசு'' பத்திரிகைக்குச் செய்தி சேகரித்துக் கடமையாற்றிய யாழ்ப்பாணக் குடாநாட்டைச் சேர்ந்த சகல நிருபர்களும், புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள ''ஈழநாதம்'' பத்திரிகைக்கு நியமிக்கப்பட்டுள்ள புதிய நிருபர்களும் எதிர்வரும் புதன் கிழமை (21-2-1990) காலை 10 மணியளவில் இல. 31, வைமன் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள ''ஈழநாதம்'' பத்திரிகை காரியாலயத்திற்கு தவறாது சமூகமளிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

ஆ—ர்

---

லப்பட்டதைத் தொடர்ந்தே இடம் பெற்றது.

வெள்ளிக் கிழமையில் இருந்து இதுவரை ஐந்து குண்டு வெடிப்புச் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன. இதன் தொடர்ச்சியாக அங்கு கடை-

டும் எனவும் கோரியுள்ளனர். இதேவேளை காஷ்மீர் ஆளுநர் மக்களுக்கு எதிராக போர் ஒன்றை தொடங்கியிருக்கிறார் என மாநில இந்திரா காங்கிரஸ் தலைவர் குற்றஞ் சாட்டியுள்ளார்.

பாகிஸ்தான் காஸ்மீர் எல்லைப் பகுதியில் எந்தவிதமான தவறான நடவடிக்கையிலும் ஈடுபடவேண்டாம் என இந்திய உள்த்துறை அமைச்சர் முத்தி முகமத் சையித் பாகிஸ்தானை எச்சரித்துள்ளார். இதனைப் பொருட்படுத்தாது பாகிஸ்தான் தவறாக நடக்குமேயானால் அதற்காக வருத்தப்பட வேண்டியிருக்கும் எனவும் தெரிவித்துள்ளார்.

---

# மணிப்பூர் மாநிலத்தில் ஆட்சிக்கு வருவது யார்?

## ஒத்தி வைக்கப்பட்ட தொகுதிகளின் முடிவுகளின் பின்னரே முடிவு

(கம்பாலா, பெப். 18)

மணிப்பூரில் சட்டசபைச்கு நடைபெற்ற தேர்தலில் இந்திரா காங்கிரஸ் கட்சியினருக்கும், எதிரணியினருக்கும் சமமான ஆசனங்கள் கிடைக்கப் பெற்றுள்ளது. அதே வேளை 12 ஆசனங்களுக்கு மீள் வாக்குப் பதிவிற்க்கும் உத்தரவிடப் பட்டுள்ளது.

மணிப்பூரில் தேர்தல் நடந்த 58 தொகுதிகளில் 46 தொகுதிகளில் இதுவரை முடிவுகள் வெளிவந்துள்ளன. இதில் 23 தொகுதிகளை இந்திரா காங்கிரஸ் கட்சியினரும், மிகுதி 23 தொகுதிகளில் எதிரணியினரும் வெற்றி பெற்றுள்ளனர். 12 தொகுதிக்கான வாக்குப் பெட்டிகள் தேர்தல் வன்முறையின் போது எரிந்து நாசமாயின. இத் தொகுதிகளுக்கேமீள் வாக்குபதிவுஇடம் மெறவுள்ளது. இந்நிலையில் இருபகுதியினரும் தம்மை சட்டசபையை அமைப்பதற்கு அழைக்கும்படி ஆளுஞரைக் கோரியுள்ளனர்.

அதே வேளை மத்திய அமைச்சரவை தற்பொழுது இருக்கும் சட்டசபையே தொடர்ந்து இருக்கும் படியும், செவ்வாய்க்கிழமை 12 தொகுதிகளுக்கு நடைபெறும் மீள் வாக்குப் பதிவின் பின்னர் வெளிவரும் முடிவுகளைக் கொண்டு யார் சட்டசபையை அமைக்கலாம்என்றுதீர்மானங்கள் மேற்கொள்ளலாம் என முடிவெடுத்துள்ளது.

ஆனால் மணிப்பூரில் முதல் மந்திரி ஆர். கே. ஜெயச்சந்திர சிங் புதிய சட்டசபை ஆரம்பிப்பதற்காக தனது பதவியை நேற்றிரவு இராஜினாமாச் செய்துள்ளதாகத் தெரிவித்தார்.

---

### மக்கள் மடல்

# தகவல் தெரியுமா?

சாவகச்சேரித் தொகுதியின் வேரற்கேணிகிராமத்தில்வசித்துவந்தவர் தம்பையா குமாரசாமி வயது 48. வாய்பேசமுடியாதவர். தாய் தந்தையரை இழந்தவர். காலில் புண் ஏற்பட்டு நீண்டகாலமாக வைத்தியம்செய்வித்துவந்தவர். வேறு தொழில் செய்ய இயலாமை காரணமாககோயில்தொண்டு விரும்பி, உணாவில் அம்மன் கோயிலில் தொண்டுகள் செய்து வாழ்ந்து வந்தகாலத்தில் 1987 அக்டோபர்-நவம்பரில்காணாமல்போய்விட்டார் காலில் நோய் முற்றினால் தானாகவே பஸ் ஏறி யாழ். ஆஸ்பத்திரிக்கு சென்று மருந்து எடுத்துக்கொண்டு திரும்புபவர். சிலவேளை வார்ட்டில் தங்கி சிகிச்சை பெறுவார். 87 அக்டோபர் 20 இல் ஆஸ்பத்திரியில் இருந்ததாக விசாரணைகளிலிருந்து தெரிந்தது. அன்றைய இராணுவ வெறியாட்டத்திற்கு இரையாகியிருக்கலாமென எண்ணி ஆஸ்பத்திரி அனுமதி ஏடுகளைப் புரட்டிய போது, ஊமைக் குமாரசாமியின் பெயர் விலாசம் காணப்படவில்லை. ''தெரியாது'' என்ற குறிப்புடன் சில அனுமதிகள் காணப்பட்டன.

தேடி அலைந்தபோது காங்கேசன்துறை இந்தியப்படை முகாமில் அவர் இருப்பதாக சொன்னார்கள். பார்க்கஅனுமதி கிடைக்கவில்லை. தொடர்ந்து விசாரித்ததில் அவரைப் போல் ஒருஊமை இருந்ததாக மட்டும் சொன்னார்கள்.

உணாவில்கோயிலில்இருந்த காலத்தில்இரவிலும் வெளியே உலாவும் வழக்கமுடையவராதலால், இந்தியப்படை ஊரடங்கு வேளையில் பிடித்துப் போயிருக்கலாம் என்றயூகமும் பிறந்தது.

இந்நிலையில் 88 யூலைவரையில் அவரது அடையாள அட்டை தபாலில்கிடைத்தது.

வன்செயல்களின் போது மறைந்தாலும் நிரூபிக்கக் கூடியளவிற்கு ஆவணங்கள் எதுவும் பெற வாய்க்கவில்லை.

மறைந்த தினத்தைக்கூட நினைவில் கொண்டு சமய கிரியைகள் செய்ய முடியவில்லை.

இப்படியொரு துர்ப்பாக்கியத்தை எண்ணி கவலைப்படுகிறார் இவரது தம்பி; யாருக்காவது இவர் பற்றிய தகவல் தெரியுமா?

த. சிவானந்தம்
சாவகச்சேரி

---

நாள் இரவு கடமையாற்றிவிட்டு நித்திரை செய்து கொண்டிருந்த ஊழியர்களையும் கைது செய்து கூட்டிச் சென்றது உங்களுக்கு எல்லாம் தெரியும்.

இதன் பின்னரும் கூட நவம்பர் பத்தாம் திகதி வரை 'ஈழமுரசு' பத்திரிகை வெளிவந்து கொண்டிருந்தது. யாழ். நகரிலிருந்தும் பின்னர் தொல்புரம், சங்கானை ஆகிய இடங்களிலிருந்தும் 'ஈழமுரசு' துணிச்சலுடன் செய்திகளைவெளி-

மக்கள் அறிந்த விஷயம். ஆனால் ஜனநாயகத்தின் காவலன் என்று தன்னைச் சொல்லிக்கொள்ளும் டில்லி ஏகாதிபத்தியம் ஈழத்தில் அச்சு யந்திரங்களுக் குண்டு வைத்துத் தகர்த்துப் பத்திரிகைகள் வெளிவராமல் தடுத்தது வரலாற்றில் மறக்க முடியாத சம்பவம்.

இந்தியப்படைகள் திரும்பிக் கொண்டிருக்கின்றன. யாழ்ப்பாணத்திலிருந்து மீண்டும் நான்கு தமிழ்த் தினசரிகள் வெளிவரத் தொடங்கியிருக்கின்றன.

---

### அமெரிக்காவின்,....

3ஆம் பக்கத் தொடர்ச்சி

விளைவாக இளைஞர்களும் மாணவர்களும் இவற்றிலிருந்து தப்புவதற்காக தமது தொழிலையும், படிப்பையும் இடையிலே நிறுத்தி விட்டு தென்னிலங்கைக்கும் வெளிநாடுகளுக்கும் ஓடித்தப்புகின்ற நிலைமையானது எதிர்காலத்தில் கல்வியறிவில்லாத சமூகம் ஒன்று உருவாக்கப்படுவதற்கு வழிவகுப்பதோடு நிகழ்காலத்தில் தமிழர் போராட்டத்திற்கு ஆதார சுருதியாகவிருக்கின்ற பொருளாதார சட்டுமானங்கள் மேலும் மேலும் சீர்குலையவே வழி சமைக்கும். இத்தோடு வெளிநாடுகளுக்குச் சென்று அந்நிய கலாசாரத்துக்கும், அந்நிய வாழ்க்கை முறைமைக்கும் ஆட்படுகின்ற இளைஞர் சமுதாயம் பல்தேசியக் கலாசாரத்திற்குட்படும் போது சமூகத்தில் பல குழப்பங்களும் சீரழிவுகளும் கலாசாரசிதைவுகளும் உருவாகிவிடும். ஆகவே வலுக்கட்டாயத்தின் பேரில் இளைஞர்களுக்குப் பயிற்சி கொடுத்தல் என்பது அரசியல் ரீதியாக ஒரு இன அழிப்பு நடவடிக்கை என்பதோடு சமூக ரீதியாக ஒரு பின்னடைவையும் பொருளாதார ரீதியாக மனிதவளம் அழிக்கப்படுதால் ஒரு வீழ்ச்சியையும் கலாசார ரீதியாக ஒரு பண்பாட்டுப் படுகொலையாகவும் அமையும் என்பதில் சந்தேகமேயில்லை. மேலும் இந்த மண்ணில் பெரும் தொகையான ஆயுதப் புழக்கத்தை ஏற்படுத்துவதன் மூலம் ஒன்றுக்கு முரண்பாடான நிலைப்பாட்டையுடைய அமைப்புக்கள் ஆயுதங்களை கையாள வைப்பதன் மூலம் தமிழ் மண்ணிலும், இலங்கையிலும் என்றைக்குமே நிலையான அமைதி ஒன்றை உருவாகாதபடி செய்வதே ''றோ''வின் திட்டமாகும். ஆகவே தெரிந்தோ தெரியாமலோ எதிர்ப்புரட்சிகர சக்திகளின் இந்த சதி வலைக்குள் தமிழ்ச்சமூகம் விழுந்து விடாதபடி பாதுகாக்கும் பொறுப்பு தமிழர் சமூகத்திற்கு இருக்கின்றது.

-அருண்பிரசாத்

---

### சிங்களவர்களுக்காக...

(4 ஆம் பக்கத் தொடர்ச்சி)

**பதில்:** என்ன நடந்திருக்குமோ எனக்குத் தெரியாது சூரிய வெப்பத்தினால் மரியாதை அணிவகுப்பில் நின்ற கடற்படை வீரன் மயக்கம் போட்டு விழுந்திருக்கலாம் என்று நான் முதலில் எண்ணினேன். எனக்கு நடந்தது தெரியாது கடற்படை வீரன் அவ்விடத்தில் நின்று வெளியேற்றப்பட்டான். அவனது சகபாடிகள் அவனை ஒரு வீரனைப்போல் நடாத்தியதாகக் கேள்வியுற்றேன். இது அசிங்கமான தொழில் என்னையும் அவர்கள் தாக்கியிருந்தால் என்ன நடந்திருக்குமோ?

**கேள்வி:** ஆனால் இந்தியக் கப்பல்கள் கடலில் நங்கூரம் பாய்ச்சி நின்றன.

**பதில்:** ஏதோ சதி முயற்சி நடைபெறப் போவதாக மற்றவர்கள் நினைத்து விடக்கூடாது என்பதற்காக கடலில் கண்ணுக்கெட்டிய தூரத்தில் கப்பல்களை வைத்திருக்கும்படி கேட்டிருந்தேன்.

**கேள்வி:** சதியையார் செய்யலாம் என்று நீங்கள் நினைத்தீர்கள்?

**பதில்:** இராணுவத்தின் உதவியுடன் ஒரு சதி முயற்சி நிகழலாம் என்று நான் அஞ்சினேன்.

**கேள்வி:** ராஜீவின் இலங்கை விஜயத்தின் போது பிரதம மந்திரி பிரேமதாசா உத்தியோக ரீதியான வைபவங்களில் கலந்து கொள்ளாததையிட்டு ராஜீவ் ஏதாவது கருத்துத் தெரிவித்தாரா?

**பதில்:** நான் ராஜீவை இது தொடர்பாக ஒன்றும் கேட்கவில்லை. மற்றவர்களை வைபவங்களுக்கு வரும்படி என்னால் நிர்ப்பந்திக்க முடியுமா? ஒப்பந்தத்தைக் கைச்சாத்திடமுன்பும், அதன் பிற்பாடும் நான் மந்திரி சபையைக் கலந்தாலோசித்துள்ளேன். நான் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதை எல்லோரும் ஆமோதித்தார்கள். மாகாண சபை தொடர்பான அபிப்பிராய பேதத்தினால் காமினி ஜெயசூரியா எம்மை விட்டு விலகினார் பலருக்கு ஒப்பந்தம் தொடர்பாகப் பல கருத்துக்கள் நிலவின. ஒப்பந்தத்தைப்பற்றிக்கலந்துரையாடும் போது அக்கருத்துக்களைமுன் வைக்கலாம் என்று நான் கூறினேன்.

**கேள்வி:** ஆனால் மக்கள் ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்ளவில்லை.

**பதில்:** சிலர் எதை எடுத்தாலும் அதை எதிர்ப்பார்கள் ஒப்பந்தத்துக்கும் பிறகு நாம் தேர்தல்களில் எல்லாம் வெற்றியீட்டியுள்ளோம். பொதுத் தேர்தலின் போதும் ஜனாதிபதி தேர்தலின் போதும் யூ. என். பி, தேர்தல் விஞ்ஞாபனத்தில் ஒப்பந்தத்தைப் பற்றி குறிப்பிட்டிருந்தோம் இந்தியத் துருப்புகள் நாட்டைவிட்டு வெளியேற வேண்டும் என்று ஜனாதிபதி பிரேமதாசா மேலதிகமாக ஒரு கோரிக்கையை முன் வைத்தார் இந்தியத் துருப்புகள் எப்படியாவது வெளியேறித்தான் ஆக வேண்டும். ஜனாதிபதி பிரேமதாசா இந்தியத் துருப்புக்கள் 1989 ஜூலைக்கு முன் நாட்டைவிட்டு வெளியேற வேண்டும் என்று வெளியிட்ட கருத்துத் தொடர்பாக சில இந்திய அதிகாரிகளுக்கு நான் பின்வருமாறு கூறினேன். ஸ்ரீலங்கா ஜனாதிபதி போகும்படி கூறினால் இந்தியத் துருப்புகள் வெளியேற வேண்டும் அவ்வளவுதான்.

**கேள்வி:** வடக்கு—கிழக்கு பகுதிகளின் எதிர்காலம் எப்படி அமையலாம்?

**பதில்:** இந்நிலையில் என் அபிப்பிராயத்தைக் கூறுவது பொருத்தமற்றது. ஜனாதிபதி பிரேமதாசாவிடம் சகல தரவுகளும் இருக்கின்றன. இன்று அவர்தான் எல்லாவற்றிற்கும் பொறுப்பு.

**கேள்வி:** ஒரு சாதாரண பிரஜை என்ற வகையில் உங்கள் கருத்து என்ன?

**பதில்:** புலிகள் தங்கள் சொல்லைக் காப்பாற்றுவார்கள் என்பது எனது நம்பிக்கையாகும்.

நன்றி: சண்டே ரைம்ஸ்

# இந்திய - பாக். போரைத் தடுக்க கூட்டுக்குழு அடுத்த மாதம் கூடும்

## பாக். முன்னாள் அமைச்சர் முயற்சி

(புதுடில்லி)

காஷ்மீர் எல்லைப் பகுதியில் ஏற்பட்டுள்ள பதட்டத்தைத் தணிப்பதற்கு இந்தியா-பாகிஸ்தான் உயர் மட்டப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகியுள்ளது, இது தொடர்பாக இந்தியா வந்துள்ள முன்னைநாள் பாகிஸ்தான் தசவல்துறை அமைச்சர் நியாசி இருமுறை இந்திய பிரதம மந்திரியைச் சந்தித்துப் பேசியுள்ளார்.

இப்பேச்சுவார்த்தையின் பிரகாரம் இந்தியா பாகிஸ்தான் உறவைப் பலப்படுத்த அமைக்கப்பட்டுள்ள கூட்டுக்குழு அடுத்தமாதம் கூடவுள்ளது. இக்குழு தனது அறிக்கையை மாத முடிவிற்குள் வெளியிடும் எனவும், அதைத் தொடர்ந்து அமைச்சர்கள் மட்டத்திலான பேச்சுவார்த்தை ஆரம்பிக்கும் எனவும் தெரிய வருகின்றது.

அதன் முதலஅம்சமாக இந்திய வெளிவிவகார அமைச்சர் ஐ. கே. குஜ்ரால் இஸ்லாமாபாத் செல்வார் எனவும் தெரியவருகின்றது.

இந்திய பிரதமரைச் சந்தித்த பின்னர் கருத்து வெளியிட்ட பாகிஸ்தான் முன்னைநாள் அமைச்சர் இரு மாதங்களுக்குள் எல்லையில் ஏற்பட்டுள்ள பதட்டம் நீங்கிவிடும் எனத் தெரிவித்தார்.

## மீண்டும் வேலை

(பகுத்திதுறை)

1970ம் ஆண்டு சிங்களத் தேர்ச்சியின்மையால் பதவி நீக்கம் செய்யப்பட்ட 16 நெசவு போதனாசிரியர்களுக்கு மீண்டும் கடந்த மாதம் முதல் புடவைக் கைத்தொழில் அமைச்சு வேலை வழங்கியுள்ளது. மீண்டும் வேலை வழங்கப்பட்ட 16 நெசவு போதனாசியர்களும் யாழ் கச்சேரியில் தமது பதவிகளைப் பொறுப்பேற்றனர்.

## ஜயந்தி தினம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஸ்ண சாரதா சேவாச்சிரமத்தில் இம் மாதம் 27 ம் திகதி (27-2-1990) ஸ்ரீ இராமகிருஸ்ணரின் 155 வது ஜன்ன தினம் கொண்டாடப்படவுள்ளது. இதற்கான நடவடிக்கைகளை சேவாச்சிரம தலைவர் சுவாமி சித்ரூபானந்தா மேற்கொண்டுள்ளார்.

## நாதம் பேசுகிறது!

★ சில கால—
மௌனம்
மீண்டும் இங்கே
வார்த்தைகளாகி விட்டது!

★ பூவின்
இதழ்களை ஒடித்து விட்டால்
வாசம்
அற்றுப் போகுமா?

★ ஓ!
அன்றைய முரசு.........
இன்றைய நாதம் ........

★ இருட்டினைக் கிழித்து
வெளிச்சத்தைத் தேடும்
விடிவிளக்கைப்
புதைக்கவா முடியும்?

வவுனியா - திலீபன்.

## மக்கள் முன்னணி செயற்குழுக் கூட்டம்

விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியின் முதலாவது செயற்குழுக் கூட்டம் விரைவில் மட்டக்களப்பு மாவட்டத்தில் நடைபெற இருப்பதாகச் சம்பந்தப்பட்ட வட்டாரங்களிலிருந்து தெரிய வருகின்றது. இச்செயற்குழுக் கூட்டத்தில் ஒவ்வொரு பிராந்திய அரசியல் அமைப்பாளர்களும் கலந்து கொள்வார்கள். வடக்கு-கிழக்கு மாகாண தற்போதைய அரசியல் நிலைமைகளை ஆராய்வதோடு இவர்கள் மக்கள் முன்னணியின் எதிர்கால வேலைத்திட்டம் பற்றியும் ஆராயவிருப்பதாகத் தெரியவருகின்றது. மக்கள் முன்னணியின் தலைவர் ஏற்கெனவே கிழக்கு மாகாணத்தில் தங்கியிருந்து கட்சியின் அமைப்பு வேலைகளைக் கவனித்து வருவது தெரிந்ததே.

## ''அறிவியல் நூல்களுக்கு ஊக்குவிப்பு'' யாழ். உதவி ஆணையாளர்

# யாழ். மாவட்டத்தில் அறிவியல் நூல்களுக்கு ஊக்குவிப்பு

### உள்ளூராட்சி உதவி ஆணையாளர்

''யாழ். மாவட்ட உள்ளூர் ஆட்சி உதவியாணையாளரின் புத்தகக் கொள்வனவுத் திட்டத்தின் கீழ் ஒரு வெளியீட்டில் 100 நூல்கள் என்ற அடிப்படையில் 200 வெளியீடுகளைக் கொள்வனவு செய்துள்ளோம். இவ்வகையில் கொள்வனவு செய்ததின் பேரில் 20,000 நூல்களைச் சேகரித்துள்ளோம். பன்முகப் படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் சென்ற ஆண்டு ரூபா 2 இலட்சத்து 50 ஆயிரமும், இதேவேளை கொழும்பிலிருந்து உள்ளூராட்சி மான்யமாக ரூபா ஒரு இலட்சத்து 85 ஆயிரமும் புத்தகக் கொள்வனவுக்கென நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது'' இவ்வாறு உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திவகலால ஈழநாதத்திற்குத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது:

''அறிவியல் சார்ந்த ஆக்கங்கள் குறைவாகவுள்ளதால், நடப்பு ஆண்டு மார்ச் மாதமளவில் அறிவியல்த்துறையை ஊக்குவிப்பதற்காக கருத்தரங்குகள் கலந்துரையாடல்கள் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும், அறிவியல் துறை சார்ந்த நூல்களை எழுதுவதற்கும் ஊக்குவிப்பு வழங்கப்படவிருக்கிறது. அவர் மேலும் தெரிவித்ததாவது:

க. பொ. த. உயர்தர வகுப்பு மாணவர்களின் பாவனைக்கென ரூபா ஒரு லட்சத்துப் 16 ஆயிரத்துக்கு நூல்களை வாங்கியுள்ளோம். மார்கா நிறுவனம், குணசேனா, ஏரிக்கரை புத்தக நிலையங்களிலிருந்தும் உசாத்துணை நூல்கள் வாங்கப்பட்டுள்ளன.

மேலும் உள்ளூராட்சி ஆணையாளரின் நிர்வாக எல்லைக்குள் யாழ். மாவட்டத்தில் 50 நூல்நிலையங்கள் செயற்படுகின்றன என்றும் ஒவ்வொரு ஆண்டும் 16 நூல் நிலையங்களுக்கு க. பொ. த. உயர்தர வகுப்புகளுக்கான நூல்கள் விநியோகிக்கப்படும் என்றும் இம்முறையில் 3 ஆண்டுகளில் 50 நூல் நிலையங்களும் க. பொ. த. உயர்தர வகுப்பு மாணவர்களின் தேவையைப் பூர்த்தி செய்யக் கூடிய நிலையில் இயங்கும்.

## வட - கிழக்க்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் தம்மிடம் கூறிய கருத்துக்களையும் கலைஞர் கருணாநிதி இந்தத் தூதுக் குழுக்களின் பிரதிநிதிகளிடம் எடுத்துக்கூறினார்.

## புலிகளுடன் மீண்டும் சந்திப்பு

முதல் நாள் விடுதலைப் புலிகளின் கருத்துக்களைக் கேட்டறிந்த முதலமைச்சர் கருணாநிதி இதர தூதுக் குழுக்களை சந்தித்துப் பேசியபின் மீண்டும் நேற்றுக்காலைவிடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசினார். இச்சந்திப்பின போது தான் வடக்கு கிழக்கு மாகாணசபை ராஜினாமச் செய்ய வேண்டுமென பதை வலியுறுத்தினாராம்.

## கருணாநிதி நம்பிக்கை

விடுதலைப் புலிகள் இயக்கப் பிரதிநிதிகளையும் ஈ. பி. ஆர். எல். எவ்., ஈ. என். டி. எல். எவ்., ரெலோ ஆகிய குழுக்களின் பிரதிநிதிகளை

தமாகத் தாம் நடத்திய பேச்சுக்கள் திருப்தியளித்திருப்பதாகச் சொன்னார். ஆயுதப் போராட்டம் முடிந்து ஈழத்

# காங்கேசன்முகாம் இளைஞர்கள் படிப்படியாக விடுதலை!

(யாழ்ப்பாணம் பெப் 19)

இந்தியப் படையினரால் கைது செய்யப்பட்டு முகாம்களில் தடுத்து வைக்கப் பட்டிருக்கும் தமிழ் இளைஞர்களில் பலர் படிப்படியாக விடுதலை செய்யப்பட்டு வருகின்றனர்.

இந்தியப் படையின் காங்கேசன்துறை முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இளைஞர்கள் கடந்த தை மாதம் 23 ஆம் திகதியிலிருந்து

## மீண்டும்

# பெற்றோர் சாதனை பணிப்பாளர் பாராட்டு

''பாடசாலைகள் இன்று மக்கள் சொத்துக்களாக மாறி விட்டன அவற்றை ப்பேணிப் பாதுகாப்பதும் அவற்றின் தேவைகளை நிறைவேற்றுவதும் மக்களின் கடமையாகும். அரசாங்கப் பாடசாலை என அலட்சியம் செய்யாது இது எமது பாடசாலை என்ற உண்மையை நன்குணர்ந்து பெற்றோர்கள் பழைய மாணவர்கள் இப்பாடசாலைத் தளபாடத் தேவைகளைப் பூர்த்தி செய்தமை போற்றுதற்குரிய சாதனையாகும்''.

இவ்வாறு கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலை அபிவிருத்திச் சங்கத்தினரின் முயற்சியால் செய்து வழங்கப் பட்ட இருபத்தையாயிரம் ரூபா பெறுமதியான மாணவர் கதிரை, மேசைகளையும், பழைய மாணவர்களால் வழங்கப்பட்ட பத்தாயிரம் ரூபா பெறுமதியான பத்து ஸ்கிறீன்களையும் பொறுப்பேற்ற வைபவத்தில் யாழ் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் சி. தியாகராசா அவர்கள் கூறினார்.

அதிபர் திரு. கா. கணேசதாசன் இவ்வைபவத்திற்கு தலைமைதாங்கினார். மேலும் அபிவிருத்திச் சங்க உபதலைவர் திரு வே. மு. பேரம்பலம் அவர்கள் பேசும் பொழுது இப்

பெற்றோரே பல வழிகளிலும் பாடசாலை வளர்ச்சிக்கு ஆதரவளிக்கின்றனர். பாடசாலைகளுக்கு உதவுவதுபுனிதப்பணி எனக் கருதி பெற்றோர்கள் பழைய மாணவர்கள் அவற்றின்தேவைகளை நிறைவேற்ற முன்வர வேண்டும். பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியிலும் நல் ஒழுக்கத்திலும் அக்கறை எடுத்து ஆசிரியர்களுடன் பெற்றோர் கலந்துரையாடி ஒத்துழைக்க வேண்டும்எனவும் கூறினார்.

மேலும் பழைய மாணவர் சங்கச் செயலாளர் செல்வி இ. யோகேஸ்வரி, பொருளாளர் செல்வி சி. மாலதி ஆகியோரும் பெற்றோரும் உரையாற்றினர். மாணவர் தலைவன் செல்வன் எஸ். பிரேம்குமார் நன்றி கூறினார்.

## ஜேர்மன் ஐக்கியம்

இரண்டு ஜேர்மனிகளும் ஐக்கியப்படுவது தவிர்க்கப்பட முடியாததென மேற்கு ஜேர்மன் வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார். கிழக்குஜேர்மனியில்அண்மைக் காலமாக ஏற்பட்டுவரும் அரசியல் மாற்றங்களின் விளைவாக ஐக்கியத்திற்கான நிலவரம் கனிவடைந்துள்ளது.

கடந்த காலத்தில் கிழக்கு ஜேர்மனியின் ஆட்சிசெலுத்தி வந்த கம்மியூனிட் தலைமைத்துவமே ஐக்கியத்துக்குத்தடையாகி இருந்தது. தற்பொழுது கிழக்கு ஜேர்மனியில் ஏற்பட்டுள்ள ஆட்சி மாற்றத்துடன் இது சாத்தியப்படக்கூடியதாக உள்ளது.

# காட்டுக்குள்ளிருந்த சக்தி நாட்டுக்கு வந்துவிட்டது

### வரதராஜப்பெருமாள் சொல்கிறார்

(திருகோணமலை)

''காட்டுக்குள் இருந்த சக்திகள் நாட்டுக்குள் வந்து விட்டன; நாட்டிலிருந்த சக்திகள் காட்டுக்குள் போயிருக்கின்றன. ஒரு விடுதலைப் போ

கிழக்கு மாகாண முதலமைச்சர் அ. வரதராஜப்பெருமாள் நேற்று முன்தினம் திருகோணமலையில் நடைபெற்ற ஒரு வைபவத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

# காங்கேசன்முகாம் இளைஞர்கள் படிப்படியாக விடுதலை!

(யாழ்ப்பாணம் பெப் 19)

இந்தியப் படையினரால் கைது செய்யப்பட்டு முகாம்களில் தடுத்து வைக்கப் பட்டிருக்கும் தமிழ் இளைஞர்களில் பலர் படிப்படியாக விடுதலை செய்யப்பட்டு வருகின்றனர்.

இந்தியப் படையின் காங்கேசன் துறை முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இளைஞர்கள் கடந்த தை மாதம் 23 ஆம் திகதியிலிருந்து விடுதலை செய்யப்பட்டு வருவது தெரிந்ததே.

காங்கேசன்துறை முகாமில் உள்ள இளைஞர்கள் இந்திய இராணுவத்தின் உடுப்பிட்டி முகாமில் வைத்து வல்வெட்டித்துறை பிரஜைகள் குழுவிடம் ஒப்படைக்கப்படுகின்றனர்.

குறிப்பிட்ட முகாமில் வைத்து கடந்த வெள்ளிக்கிழமை 85 இளைஞர்களும் சனிக்கிழமை 87 இளைஞர்களும் விடுதலை செய்யப்பட்டனர். தம் பிள்ளைகளின் விடுதலைக்காகப் பல பெற்றோர்கள் வல்வை பிரஜைகள் குழு அலுவலகத்தில் தினமும் காத்திருப்பதைக் காணக் கூடியதாக உள்ளது. (தி)

## மீண்டும் மத்திய சந்தை

(கரவெட்டி)

நீண்டகாலமாக பாதுகாப்புக்குக் காரணங்களை முன்னிட்டு மூடப்பட்டிருந்த நெல்லியடி மத்திய சந்தை மீண்டும் புலிக்கொடியேற்றி பொதுமக்களாலும், வர்த்தகர்களாலும் திறக்கப்பட்டது.

நெல்லியடியில் நிகழ்ந்த வர்த்தகர்கள், பொதுமக்கள் கொலைகளையடுத்து மூடப்பட்டிருந்த இச்சந்தை அண்மைக் காலங்களில் வதிரிச் சந்தி, கன்பொல்லை, சம்பந்தர்கடை முதலான இடங்களிலே நடைபெற்றுவந்தது.

டறிந்த முதலமைச்சர் கருணாநிதி இதர தூதுக் குழுக்களை சந்தித்துப் பேசியபின் மீண்டும் நேற்றுக்காலைவிடுதலைப் பின்போது தான் வடக்கு கிழக்கு மாகாணசபை ராஜினாமச் செய்ய வேண்டுமென பதை வலியுறுத்தினாராம்.

## கருணாநிதி நம்பிக்கை

விடுதலைப் புலிகள் இயக்கப் பிரதிநிதிகளையும் ஈ.பி.ஆர்.எல்.எவ்., ஈ.என்.டி.எல்.எவ்., ரெலோ ஆகிய குழுக்களின் பிரதிநிதிகளையும், ஈரோஸ் பிரதிநிதிகளையும் சந்தித்துப் பேசிய பின் செய்தியாளர்களிடம் பேசுகையில் ஈழப் பிரச்சினை சம்பந்தமாகத் தாம் நடத்திய பேச்சுக்கள் திருப்தியளித்திருப்பதாகச் சொன்னார். ஆயுதப் போராட்டம் முடிந்து ஈழத்தில் அமைதி திரும்புவதற்கான வழி பிறந்துள்ளது என்று கருணாநிதி நம்பிக்கை தெரிவித்தார்.

## மாறன் டில்லி செல்கிறார்

தமிழீழ விடுதலைப் புலிகளுடனும் மற்றும் குழுக்களுடனும் தமிழக முதலமைச்சர் கருணாநிதி கடந்த மூன்று தினங்களாக நடத்திய பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்ட மத்திய நகர்த்துறை வளர்ச்சிஅமைச்சர் முரசொலி மாறன் இன்றோ நாளையோ புதுடில்லி சென்று வெளிவிவகார அமைச்சர் ஐ.கே. குஜ்ராலையும் பிரதமர் வி.பி. சிங்கையும் சந்தித்துப் பேச்சுவார்த்தைகளின் விபரங்களை எடுத்துச் சொல்வார்.

## பல்கலைக் கழகத்தில் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், பெப்-19

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக கல்வி சார் ஆய்வு அரங்கினால், ''பூநகரிப் பிராந்தியத் தொல்லியல் மேலாய்வில் கிடைத்த தொல்பொருள் சின்னங்கள் - ஒரு வரலாற்று ஆய்வு'' என்னும் விடயம் பற்றி வரலாற்றுத்துறை விரிவுரையாளர் ப. புஷ்பரத்தினம் அவர்கள் எதிர்வரும் புதன்கிழமை பிற்பகல் இரண்டு மணிக்கு பொருளியல் துறை விரிவுரை மண்டபத்தில் உரையாற்றுவார். இக் கருத்தரங்குக்கு வரலாற்றுத் துறை பேராசிரியர் சி. பத்மநாதன் அவர்கள் தலைமை தாங்குவார்.

களையும் பொறுப்பேற்ற வைபவத்தில் யாழ் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் சி. தியாகராசா அவர்கள் கூறினார்.

அதிபர் திரு. கா. கணேசதாசன் இவ்வைபவத்திற்கு தலைமைதாங்கினார். மேலும் அபிவிருத்திச் சங்க உபதலைவர் திரு வே. மு. பேரம்பலம் அவர்கள் பேசும் பொழுது இப் பாடசாலையில்சேவை புரியும் அதிபர், ஆசிரியர்களின் நற்சேவையில் நம்பிக்கை கொண்ட

## நாட்டுக்கு வந்துவிட்டது

### வரதராஜப்பெருமாள் சொல்கிறார்

(திருகோணமலை)

''காட்டுக்குள் இருந்த சக்திகள் நாட்டுக்குள் வந்து விட்டன; நாட்டிலிருந்த சக்திகள் காட்டுக்குள் போயிருக்கின்றன. ஒரு விடுதலைப் போராட்டத்தில் இது தவிர்க்க முடியாதது'' என்து வடக்குக் கிழக்கு மாகாண முதலமைச்சர் அ. வரதராஜப்பெருமாள் நேற்று முன்தினம் திருகோணமலையில் நடைபெற்ற ஒரு வைபவத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

இந்த வைபவம்தான் தாம் இறுதியாகக் கலந்துகொண்ட வைபவமாக இருக்கலாமென்றும் கூறினார். மாகாண சபைக்குஒதுக்கப்பட்டநிதிக்கு தாம் ஒரு முகாமையாளராகப் பணியாற்றுவதாகவே அமைந்தது என்றும் சொன்னார்.

## மந்திகையின் குறைபாடுகள்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை அரசினர் ஆதாவு வைத்திய சாலையில் (மந்திகை) உள்ள பல குறைபாடுகளை சுட்டிக் காட்டி அவற்றை நிறைவேற்றித் தரும்படி வைத்திய சாலை அபிவிருத்திசபை யாழ். சுகாதார அத்தியட்சகரைக் கேட்டுள்ளது.

இவ் வைத்திய சாலைதுல் பொது வைத்திய நிபுணர், மனநோய் வைத்திய நிபுணர், சத்திர சிகிச்சை நிபுணர் போன்றோர் இல்லையென்றும் இரு வாரத்திற்கொரு முறை நடாத்தப்பட்டு வந்த விசேட சிகிச்சைப் பிரிவுகளான கண்வைத்திய கிளினிக் சருமநோய் வைத்திய கிளினிக் கண், மூக்கு, தொண்டை வைத்திய கிளினிக் போன்றவை இயங்கவில்லையென்றும் அக் கோரிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

அவ் வைத்தியசாலையில் பத்து தாதிமார்கள் பற்றாக் குறை நிலவுவதாகவும் பதினான்கு வைத்திய உத்தியோகத்தர்களுக்குப் பதிலாக இரு வைத்திய உத்தியோகத்தர்கள் தான் பணிபுரிந்து வருகின்றனர் என்றும் இவற்றினால் நோயாளிகள் பல்வேறுபட்ட கஷ்டத்துக்குள்ளாகியுள்ளனர என்றும் அக்கோரிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## நெல் கொள்வனவு

நெல், உழுந்து ஆகியவற்றை புதிய உத்தரவாதவிலையில் கொள்வனவு செய்வதற்கு வடபிராந்திய நெல் சந்தைப் படுத்தும் சபை தீர்மானம் எடுத்துள்ளதாகத் தெரியவருகிறது. புதிய விலையின் பிரகாரம் நெல்லுக்கு முன்னைய விலையைவிட கிலோ ஒன்றிற்கு 1.43 சதம் அதிகமாக கொடுக்கப்படவுள்ளதாகத் தெரியவருகின்றது.

# தனியார் கல்வி நிலையங்களுக்கு முதற்கட்டக் கட்டுப்பாடு

(கரவெட்டி)

'இவ் ஆண்டு தமிழீழப் பகுதியிலுள்ள அனைத்துப் பாடசாலைகளிலும் கல்வியில் ஒரு மறுமலர்ச்சி ஏற்பட வேண்டும்'. இதற்கு சகல பாடசாலை அதிபர்களும், ஆசியயர்களும், பெற்றோர்களும், தனியார் கல்விநிலைய நிர்வாகிகளும் எமக்குப்பூரண ஒத்துழைப்பு நல்கவேண்டும்,

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணி வடமராட்சிப் பொறுப்பாளர் திரு தீபன் வடமராட்சியில் நடைபெற்ற கல்விக் கருத்தரங்கொன்றில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினார்

வல்வை மகளிர் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற இவ்வைபவத்தில் அதிபர்கள், ஆசிரியர்கள், தனியார் கல்வி நிலைய நிர்வாகிகள், பெற்றோர்கள், கல்விமான்கள் முதலானோர் கலந்து கொண்டனர். திரு. தீபன் தொடர்ந்து பேசுகையில்,

''இன்று எமது மாணவர்கள் உடல் வளர்ச்சி குன்றியவர்களாகவும், சுயமாகச் சிந்திக்கும் ஆற்றல் அற்றவர்களாகவும் காணப்படுவது வேதனைக்குரிய விடயமாகும். இதற்குரிய காரணம் இவர்களுக்கு போதியஉடற்பயிற்சி, கலை, மற்றும் சாரணியம் முதலானவை கிடைக்காமையே ஆகும், மாணவர்கள் தினமும் காலை முதல் மாலை வரை இயந்திரவேகமாக தனியார் கல்வி நிலையங்களை நாடிச் செல்வதனாலேயே இத்துர்ப்பாக்கிய நிலை நம் முன் தலைவிரித்தாடுகிறது.

எனவே இதனை நீக்கி மாணவர் சமுதாயத்தின் மத்தியில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த இங்கு வருகை தந்த அனைவரும் மனப்பூர்வமான உதவியை நல்க வேண்டும்'' என்றார். தனியார் கல்வி நிலையங்களின் வளர்ச்சியானது பாடசாலைகளின் வளர்ச்சியையும், அவற்றின் ஆக்கபூர்வமான செயல் திட்டங்களையும் பாதிப்பதாகப் பெரும்பாலான அதிபர்களும், பெற்றோர்களும் கருத்துத் தெரிவித்தனர்.

இதன்படி சில தனியார் கல்வி நிலையங்களின் மீதும் கட்டுப்பாடு விதிக்கும் முதற் கட்ட நடவடிக்கையாக எதிர்வரும் 19-02-90 முதல் பாடசாலை நாட்களில் காலை நேர வகுப்புக்கள் நடாத்தக் கூடாதெனவும், மாலைநேரங்களில் இரவு 7 மணிக்குப் பின் வகுப்புக்கள் நடாத்த கூடாதெனவும் திரு. தீபன் வேண்டுகோள் விடுத்தார்.

## மீண்டும் வகுப்புகள்

(அராலி)

தென்பகுதியில் இடம் பெற்ற வன்செயல்களை அடுத்து இடை நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தின சட்டமாணிப் பட்ட நெறிக்கான வகுப்புக்கள் மீண்டும் ஆரம்பமாகின்றன. இதன்படி யாழ்ப்பாண பிராந்திய மண்டபத்தில் வரும் இருபத்தி நான்காம் திகதி மேற்படி வகுப்புகள் ஆரம்பமாகவுள்ளன.

## பேரீச்சம்பழம் கையளிப்பு

(கொழும்பு)

50 லட்சம் ரூபா பெறுமதியான பேரீச்சம் பழத்தினை சவூதிமன்னர் இலங்கை அமைச்சர் மன்சூர் அவர்களிடம் கையளித்தார். இவை முஸ்லீம் மக்களது றம்ழான் மாதத்தில் நோன்பை முடித்துக் கொள்வதற்காக, இலங்கை வாழ் முஸ்லீம் மக்களுக்கு வழங்குவதற்காக கையளிக்கப்பட்டன.

## கிழக்கு பல்கலைக் கழக அபிவிருத்தி

(கொழும்பு)

கிழக்குப் பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தை அபிவிருத்தி செய்வதற்கு தொழில் நுட்ப உதவி வழங்குவதாக, இலங்கைக்கு விஜயம் செய்த பிரிட்டிஸ் கவுன்சில் உறுப்பினர் டேவிற் ஒவ் அவர்கள் உறுதியளித்தார்.


நல்வாழ்த்துக்கள்

**New Stanleys**

Authorised Distributors for CIC Paints.
Dealers in: PAINTS, HARDWARE & BUILDING MATERIAL ETC.,

யாழ் நகரில்

டியூகோ, டியூலக்ஸ், பென்ரலைற் பெயின்ற் வகைகளுக்கு
உத்தரவுபெற்ற வியாபார நிறுவனம்

நியூ ஸ்ரான்லீஸ்
95/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 22135



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி, 31-ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 19-ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப் பெற்றது: